இதழ் 343
14 யூன் 2025
17 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube.com/@IlakkuWeb2.0
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1



## சந்திப்பு வருவது கண்டு சந்திக்கும் இடங்களும் உண்டு!

## சந்தர்ப்பவாத தமிழ்த் தேசிய அரசியல்.!

பா. அரியநேத்திரன்

## தமிழர் தேசமும்





## தொடரும் காணி அபகரிப்புகளும்...

**தாமோதரம் பிரதீவன்,** மனித உரிமை செயற்பாட்டாளர், அம்பாறை மாவட்டம்



## தமிழ்நாட்டில் ஈழ ஏதிலியர் நிலை...?

ஜோஸ்–தமிழ் நாடு

# இராணுவமுகாமுக்கு அருகில் மனித என்புச் சிதிலங்கள் மீட்பு



பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் நீண்டகாலமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட முகாமுக்கு அருகில் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கற்கோவளம் இராணுவ முகாமுக்குக் கிழக்குப் பக்கமாக உள்ள புல்வெளியிலேயே இந்த என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள் ளன. இது தொடர்பில் காவல் துறையினருக்கு தகவல் வழங்கப்பட்டு, அந்த என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அந்த மனிதச் சிதிலங்கள் குறித்த பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் காணாமற் போனவருடையதாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# ஈரான் மீது தாக்குதல்- முக்கிய தளபதிகள் மரணம்



ஈரான் மீது இஸ்ரேல் வெள்ளிக்கிழமை(13) அதிகாலை மேற்கொண்டவான் தாக்குதலில் ஈரானின் முன்னனி தளபதிகள் மற்றும் அணுசக்தி விஞ்ஞானிகள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மிகவும் துல்லியமாக திரட்டப்பட்ட புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் ஈரானின் முக்கிய தளபதிகள் மற்றும் விஞ்ஞானிகளின் இருப்பிடங்கள், வான் பாதுகாப்பு நிலைகள், ரடார் நிலைகள், அணுசக்தி ஆய்வு மையங்கள் உட்பட 100 இற்கு மேற்பட்ட இலக்குகள் தாக்கப்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சர்ச்சையை ஏற்படுத்திய 'ரஜ லுனு' ஆனையிறவு உப்பளமாக மீண்டும் பெயர் மாற்றம்




சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த 'ரஜ லுனு' மீண்டும் ஆனையிறவு உப்பு என்று பெயர் மாற்றப்பட்டு சந்தைப்படுத்தப் படுவதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த ஆனையிறவு உப்பளம் அண்மையில் மீண்டும் திறக்கப்பட்டது.

எனினும் அங்கிருந்து சந்தைக்கு அனுப்பப்படும் உப்பு 'ரஜ லுனு' என்று பெயரிடப்பட்டு சந்தைக்கு விடுவிக்கப்பட்டது.

இந்த விடயம் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

அதேநேரம் குறித்த உப்பின் பெயர் மாற்றப்பட வேண்டும் என நாடாளுமன்றிலும் வலியுறுத்தப்பட்டது.

இந்த விடயம் குறித்து ஆளும் தரப்புக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே நாடாளுமன்றில் வாத பிரதிவாதங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்தநிலையில் 'ரஜ லுனு' என்று சந்தைப்படுத்தப்பட்ட உப்பு தற்போது 'ஆனையிறவு உப்பு' என்ற பெயரில் சந்தைப் படுத்தப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

குறித்த உப்பளம் மீண்டும் திறக்கப்பட்டபோது தாம் வழங்கிய வாக்குறுதியின்படி, தற்போது அதன் பெயர் ஆனையிறவு உப்பு என பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இந்திய விமான விபத்து பலியானவர்களின் எண்ணிக்கை 290 ஆக உயர்ந்தது



கடந்த வியாழக்கிழமை(12) இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இடம்பெற்ற விமான விபத்தில் விமானத்தில் இருந்த 241 பேரும் தரையில் உள்ள மருத்துவக் கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களுமான இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 290 ஆக உயர்ந்துள்ளது.

இந்திய வான்போக்குவரத்து வரலாற்றில் இடம்பெற்ற மிகவும் மோசமான விமான விபத் தாக இது அமைந்துள்ளது. அமெரிக்க

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அனைத்துலக நீதிமன்ற நீதிபதிகள் மீது அமெரிக்கா தடை




இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கலன்ற் மீது பிடிவிறாந்து பிறப்பித்துள்ள நெதர்லாந்தை தளமாகக் கொண்ட அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் 4 நீதிபதிகள் மீது அமெரிக்கா தடை உத்தரவை விடுத்துள்ளது.

காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் போரில் இதுவரையில் 54,000 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டுள்ளனர். 126,000 பேர் காயமடைந்துள்ளனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் இஸ்ரேலிய அதிகாரிகள் மீது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் கடந்த வருடம் நவம்பர் மாதம் பிடி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# வடக்கு கடற்கரையில் ஒதுங்கும் பொலித்தீன் மூலப்பொருட்கள் : மக்கள் அச்சம்



யாழ்ப்பாணமாவட்டத்தின் புங்குடுதீவு தெற்கு கடற்கரையோர பகுதி, குறிகட்டுவான், நயினா தீவு மற்றும் நெடுந்தீவு கடற்கரையோர பகுதிகளில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் கரையொதுங்கியுள்ளன.

இதன் காரணமாக பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். கடற்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட கடற்சூழல் உத்தியோகத்தர்களினால் குறித்த பிளாஸ்ரிக் துகள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட பொருட்கள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான பிரதான மூலப்பொருள் என்பதுடன் இது சூழலுக்கும் மனிதனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பொதுமக்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் விழிப்புணர்வுடன் செயற்படுவதுடன் இவற்றை எடுத்துச் செல்வதனை தவிர்க்கு மாறு அறிவுறுத்தப்பட்டுள் ளனர்.

இதேவேளை, கரையொதுங்கியுள்ள பிளாஸ்ரிக் துகள்கள் குறித்து உடனடியாக விரிவான ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்திற்கு கடற்றொழில் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடல் மாசடைதல், குறிப்பாக பிளாஸ்ரிக் கழிவுகளால் ஏற்படும் மாசடைதல், சுற்றுச்சூழலுக்கும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# உலகின் இரண்டாவது பெரும் பின்னிருக்கை செல்வமாக மாறிய தங்கம்



உலகின் இரண்டாவது பெரும் பின்னிருக்கை செல்வமாக தங்கம் மாறியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஈரோவின் இடத்தை அது தற்போது பிடித்துள்ளது என கடந்த புதன்கிழமை(11) ஐரோப்பிய ஒன்றியத்தின் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள பூகோள அரசியல் நெருக்கடி காரணமாக பல நாடுகள் தங்கத்தில் முதலீடுகளை மேற்கொள்வதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய வங்கியின் தங்கத்தின் கையிருப்பு கடந்த ஆண்டு 1000 தொன்களாக அதிகரித்துள்ளது. அது கடந்த தசாப்தங்களுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்கு அதிகமாகும். தற்போது அதன் மொத்த

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இஸ்ரேலின் 'சிங்கத்தின் எழுச்சி' உலகப் போருக்கான தொடக்கமாகையில்; ஈழத்தமிழர் இறைமையை ஈழத்தமிழரே பேண வேண்டிய நிலை

ஈரானின் பல இடங்களில் இஸ்ரேலின் "சிங்கத்தின் எழுச்சி" என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட வான் படையெடுப்பு தாக்குதல்கள், உலகின் சமகால வர்த்தக போர் தொழில்நுட்பப் போர் நிலையை முழுஅளவிலான நாடுகளுக்கு இடையிலான பெரும் உலகப் போராக பரிணமிக்க வைப்பதற்கான முதல்நிலையினை யூன் 13ம் நாள் 2025இல் தொடங்கியுள்ளது. இதில் ஈரானின் தலைநகருக்கு 140 மைல் தூரத்தில் உள்ள நட்டான்ஸ் (Natanz) அணுசக்திக்கான யுரேனிய உற்பத்தி வளப்பகுதிகளை இஸ்ரேல் தாக்கினாலும் கதிர்வீச்சுக் கசிவு ஏற்படவில்லையென ஈரான் அறிவித்துள்ளது. ஆயினும் ஆறு ஈரானிய அணுசக்தி பேராசிரியர்களும் விரிவுரையாளர்களுமான விஞ்ஞானிகளை இஸ்ரேல் தாக்குதல் கொலைசெய்துள்ளது. ஈரான் இராணுவத்தின் துணைப்படையான ஈரானிய புரட்சிகர காவல் படையின் தலைமைத்தளபதியாக 2009 முதல் பொறுப்பில் இருந்த குசைன் சலாமியையும் இஸ்ரேல் தாக்குதல் கொன்றுள்ளது. இந்தப் பாரதூரமான அனைத்துலக சட்டங்களை மீறிய இஸ்ரேலின் இந்தத் தாக்குதல்களுக்குத் தகுந்த பதிலடியை ஈரான் வழங்குமென்று ஈரான் அறிவித்துள்ள நிலையில் நீண்டகால நேரடிப் பெரும்போர் மத்திய கிழக்கில் தோன்றியுள்ளமையை உலகு உணர்கிறது.

இத்தகைய உலகப் போர்ச் சூழல்கள் ஏற்படுகையில் உலகில் தங்கள் தன்னாட்சிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் சிறுதேச இனங்களின் மேலான அனைத்துலகக் கவனம் சிதறடிக்கப்படுவது உலக வழமை. இதனைப் பயன்படுத்திச் சிறுதேச இனங்களை ஆக்கிரமிப்பு ஆட்சிக்கு உட்படுத்தி நிற்கும் அரசாங்கங்கள் அவர்கள் உடைய இறைமையை இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பின் மூலம் ஒடுக்குவதும் உலக வழமை. இந்தப் பேரபாயத்ததுள் உலகின் மூத்த இனங்களில் ஒன்றாக இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் இன்று உள்ளனர். இந்நிலையில் ஈழத்தமிழர்கள் உலக இனமாக இன்று உலகின் முக்கிய நாடுகளில் எல்லாம் வாழ்ந்து வரும் தங்களின் வரலாற்றுப் பரிணாமத்தைக் கவனத்தில் எடுத்து அனைத்துலக ஈழத்தமிழர்கள் பேரவை ஒன்றை இலங்கையிலும் உலகிலும் வாழும் அனைத்து ஈழத்தமிழர்களின் வறுமையையும் அறியாமையையும் நீக்கும் சமுகமூலதனப்பலத்தையும் அறிவூட்டலையும் அளிக்க வல்ல முறையில் தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட முறையில் தாங்கள் தேசங்கடந்துறை மக்கள் என்ற பலத்துடன் அமைத்தாலே ஈழத்தமிழர்களின் இறைமை யைப் பாதுகாக்க இயலும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

இதனைப் பலமுறை இலக்கில் முன்னரும் கூறி வந்துள்ள போதிலும் இன்றைய உலக படைபல சமநிலை மாற்றங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒவ்வொரு நாடும் தனது நாட்டின் மக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் தேவையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் பிரித்தானிய காலனித்துவல அரசாங்கத்தினால் தங்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களின் அரசியல் எதிர்காலத்தை அமைக்கும் தன்னாட்சி உரிமையினை தங்களின் அரசியல் உரிமையாக ஈழத்தமிழர்கள் பயன்படுத்த இயலாதவாறு ஈழத்தமிழர்களின் இறைமை சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் 04.02. 1948 இல் உட்படுத்தப்பட்டதன் விளைவாக இன்று வரை காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ள ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை அனைத்துலக நாடுகளின் மன்றமான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நல்லுறவு தொடர்பாலர் நியமனத்தின் மூலம் ஈழத்தமிழரின் தன்னாட்சி மூலம் அவர்கள் தங்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய முறையில் அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் செய்யப்பட வேண்டிய வொன்றாக உள்ளது. இதற்காக 2023இல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் குரல் எழுப்பிய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்கள் தாயகத்தில் தமிழ்த்தேசியப் பேரவையாக ஈழத்தமிழ் அரசியல்வாதிகளை பொதுநோக்கில் இணைக்கும் பெரும் முயற்சியில் வெற்றிகரமாக பயணித்து வருகின்றார். ஆயினும் தமிழசுக்கட்சியினர் இந்த தமிழ்த்தேசியப்பேரவைக்கு ஈழத்தமிழ் மக்கள் அளித்த வாக்குப்பலத்தின் அடிப்படையிலான ஆணையின் கீழ் உள்ளூராட்சியில் அவர்கள் செயற்படாதவாறு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் முகவர்களாக தாயகத்தில் செயற்படும் கட்சிகளுடன் இணைந்து யாழ்ப்பாண மாநகரசபை உட்பட ஈழத்தமிழ்த்தேசியப் பேரவை ஆட்சி அமைக்கக் கூடிய பத்து முதல் பதின் மூன்று உள்ளூராட்சி சபைகளில் ஈழத்தமிழர்களின் வாக்களிப்பு நோக்குக்கு எதிரான வகையில் சனநாயகப்படுகொலை செய்து தங்கள் பதவிகளைப் பெற்றுள்ளனர்.

இதன்வழி ஈழத்தமிழர்களின் இறைமையும் தேசிய ஒருமைப்பாடும் ஒடுக்கப்படும் நிலையை இவர்கள் உருவாக்கியுள்ளனர். தந்தை செல்வநாயகத்தின் 1975ம் ஆண்டு சிறிலங்காப் பாராளுமன்ற வெளியேற்ற உரையான ஈழத்தமிழர் தன்னாட்சிப் பிரகடனத்துடன் நிறைவுற்றுவிட்ட தமிழரசுக்கட்சி என்ற 1949 மதல் 1975 வரையான 26 ஆண்டுகால கட்சியொன்றின் வரலாற்றுப் பெயரை இன்று தமது அரசியல் நோக்குகளுக்கான கட்சிப் பெயராகக் காட்டி மக்களை மயக்கி வரும் இன்றைய ஈழத்தமிழ் தமிழரசு அரசியல்வாதிகளை ஈழத்தமிழர்கள் இனங்கண்டு அவர்களுக்கான தமது எதிர்ப்பையும் வாக்கு மறுப்பையும் உறுதிப்படுத்துவதன் மூலமாகவே இன்றைய காலகட்டத்தில் சிறிலங்காவின் இன்றைய அரசின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஈழத்தமிழர் சிங்கள பௌத்த அரசில் வடக்கில் வாழும் கிழக்கில் வாழும் தனித்தனிச் சமுகம் என்ற அபாயகரமான புதிய அரசியல் வரவிலக்கணத்துள் இருந்து தப்பிக்க முடியும்.

தையிட்டியில் ஈழத்தமிழரின் தனிப்பட்ட நிலங்கள் பௌத்த பிக்குவால் அபகரிக்கப்பட்டுள்ள இன்றைய பிரச்சினையில் தேசிய மக்கள் சக்தி பிக்குவின் நில அபகரிப்பை அங்கீகரித்து பாதிக்கப்பட்ட காணிச் சொந்தக்காரருக்கு நட்டஈட்டுத் தொகை அல்லது இன்னொரு இடத்தில் காணி என்கின்ற தீர்வை அதன் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் மூலம் உறுதிப்படுத்தியுள்ளனர். இதுதான் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினையில்லையென்ற ஈழத்தமிழின அழிப்புச் சிங்கள அரசத்தலைவர் மகிந்தாவின் வழியிலும் சிங்கள பௌத்த நாடாக எம்மை ஆட்சிக்குக் கொண்டு வந்த சிங்களவர்களுக்கே நாம் அரசு என்ற கோத்தபாய சிந்தனையின் வழியிலும் ஏக்கிய இராச்சிய என்ற ரணில் சிறிசேன சிங்கள அரசத்தலைவர்களின் கூட்டுப்படைப்பான ஒரே அரசு சிங்கள அரசு என்ற வழியிலும் ரணிலின் வடக்கு கிழக்கு என்று ஈழத்தமிழின இருப்பையே இல்லாதொழிக்கும் வழியிலும் இன்றைய தேசிய மகக்ள் சக்தி அரசாங்கமும் செயற்படுகிறது என்பதற்கான தெளிவான சான்றாகவுள்ளது. இந்நிலையில் தமிழரசுக்கட்சி இன்றைய அரசின் சிங்கள மயமாக்கல் முயற்சிகளை ஈழத்தமிழரிடை முன்னெடுக்கும் அரசியலைச் செய்கின்றார்கள் என்பதற்கு அவர்கள் ஈழத்தமிழினப் பகைமைகளுடன் இணைந்து ஆட்சி அமைத்தமையை விட இனியொரு சான்று தேவையில்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் நாளாந்த இதழ் ஒன்று ஈழத்தமிழ்த் தேசியம் குறித்து மீள்வரைவு செய்ய வேண்டும் என்னும் ஆசிரிய தலையங்கத்தைக் கடந்த வாரத்தில் எழுதியுள்ளது. இதனை வாசித்த பொழுது ஊடகங்களின் அறியாமையைத் தெளிவாக விளங்க முடிந்தது. அவ்வாறே தமிழகத்தில் திரைப்பட நடிகர் கமலகாசன் தமிழில் இருந்துதான் கன்னடம் பிறந்தது என்று தனது 'தக் லைவ்' திரைப்பட வெளியீடு தொடர்பான கூட்டமொன்றில் பேசியமைக்குக் கன்னட நீதிமன்ற நீதிபதி மன்னிப்புக் கேட்க வேண்டுமென நீதிமன்றத்தால் வலியுறுத்தியும் கமலகாசன் கேட்க மறுத்தத்தமை குறித்த தமிழகத்தின் கல்வித்துறையிலும் தமிழ் இலக்கியத்துறையிலும் குறிப்பிடத்தக்க புகழ்படைத்த பெருமாள் முருகன் 'த இந்து' தமிழ் நாளிதழுக்கு கமலகாசனின் கருத்துச் சுதந்திர உறுதிப்பாட்டைப் பாராட்டி எழுதிய கட்டுரையில் மூலத் தமிழில் (Proto-Tamil) இலிருந்து மொழிகள் தோன்றின என்ற உண்மையை மறுத்து மூலத் திராவிட மொழியில் (Proto-Dravidian Language) இருந்தே கன்னடம் உட்பட்ட திராவிட மொழிகள் தோன்றின என்ற கருத்தை மக்கள் மயப்படுத்தியுள்ளார். இதனை வீரகேசரி மறுவெளியீடு செய்துள்ளது. இந்த ஊடக வெளிப்பாடுகள் இரண்டுமே ஈழத்தமிழினத்துக்கான அறிவூட்டலில் தேவையை வெளிப்படுத்தி உள்ளன. ஈழத்தமிழ்த் தேசியம் என்பது இந்த மண் எங்களின் சொந்த மண் என்கின்ற மக்களின் வரலாற்றுத் தாயகத்தினை மக்கள் மீட்கும் மண்மீட்பைக்குறிக்கிறது என்பதும் திராவிட மொழிக் குடும்பம் என மூலத் தமிழைக் கொண்ட மொழிகளின் குடும்பங்கள் குறிக்கப்பட்டனவே தவிர திராவிட மொழியென்று ஒரு மொழி இருந்தது இல்லை என்பதும் இவை குறித்து எழுதியவர்களுக்கே தெரியாத நிலை உள்ளது என்பதால் தான் ஈழத்தமிழர்களின் பொதுக்கருத்துக்கோளமொன்றை உருவாக்கிட வல்ல ஈழத்தமிழ்த் தேசிய ஊடகத்தை ஈழத்தமிழர்கள் உயிரோடைத் தமிழ் வானலையை இலக்கு மின்னிதழைக் கொண்டு பலமான ஈழத்தமிழர் ஊடகமாக உருவாக்குங்கள் என்று அடிக்கடி ஆசிரிய தலையங்கத்தில் எழுதி வருகின்றோம். உலகப் போர் மூண்டுவிட்ட இந்நிலையிலாவது தயவு செய்து விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் ஈழத்தமிழர்களுக்கான தேசிய ஊடகம் ஈழத்தமிழர்களுக்கான பொதுக்கட்டமைப்பு என்பவற்றில் உடனடிக் கவனத்தை ஒவ்வொரு ஈழத்தமிழரும் செலுத்த வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**

# கல்மடுக்குளத்தையும் அதன்கீழான வயல்நிலங்களையும் விடுவிக்க

## ரவிகரன் நா.உ வலியுறுத்து.



வவுனியாவடக்கு பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக கல்மடுக் குளத்தையும், அதன்கீழான வயல்நிலங்களையும் விடுவிப்புச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவிடம் நாடாளுமன்றஉறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு தமிழ்மக்கள் நீண்ட கால இடப்பெயர்வைச் சந்தித்த இடங்கள், தற்போது பயன்பாடின்றி பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றபோது, அந்தஇடங்களை வனப் பகுதியாகக் கருதி வனவளத் திணைக்களம் ஆக்கிரமிப்புச்செய்யும் செயற்பாட்டிற் கும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக் கையில், கல்மடுக்குளம் என்றொரு குளம் இருப்பின், அக்குளத்தின்கீழ் மக்களுக்கு வயல்காணிகள் கட்டாயம் இருந்திருக்கும். எனவே அக்குளத்தின் கீழ் மக்களுக்கு வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இவ்வாறிருக்கும்போது வனவளத்திணைக்களம் மக்களுக்குரிய வயல்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

கட்டுரை




# பூகோளச் சிக்கலுக்குள் மீண்டும் இலங்கை

## பகுதி–03


விதுரன்


**சென்றவாரத் தொடர்ச்சி**

சீனாவைப் பொறுத்தவரையில் ராஜபக்ஷக்களின் மீள்எழுச்சி2022இல்தோல்விகண்டதன்பின்னர் இலங்கையில் தன்னுடைய 'ஒரேமண்டலம் மற்றும் பாதை' (பி.ஆர்.ஐ) முன்முயற்சியை எவ்வாறு முன்னகர்த்துவது என்பதில் திரிசங்கான நிலைமையே காணப்பட்டது.

குறிப்பாக ராஜபக்ஷக்களின் பிற்பாதி காலத்தினை ஆட்சி செய்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டுக்கலவை அரசாங்கம் சீன ஆய்வுக்கப்பல்கள் இரண்டுக்கு அனுமதி வழங்கிய தன் பின்னர் எடுத்திருந்த கடுமையான முடிவுகள் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.



விசேடமாக, தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு வழங்கிய 1545மில்லியன் டொலர்கள், நெடுஞ்சாலை வெளிச்சுற்றுக்காக வழங்கிய 494மில்லியன் டொலர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கான நெடுஞ்சாலைக்காக வழங்கிய 248மில்லியன் டொலர்கள், அம்பாந்தோட்டை விமான நிலையத்துக்காக வழங்கிய 243மில்லியன் டொலர்கள், கொழும்பு கிழக்கு முனைத்தில் முதலீடு செய்த 500மில்லியன் டொலர்கள், நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்திற்காக வழங்கிய 1346மில்லியன் டொலர்கள், கொழும்பு துறைமுக நகரத்துக்காக வழங்கிய 1300மில்லியன் டொலர்கள், தாமரைக் கோபுரத்துக்காக வழங்கிய 88.6மில்லியன் டொலர்கள் உள்ளிட்ட 'வெள்ளை யானை திட்டங்களுக்கான' கடன்களை எவ்வாறு மீளப்பெறுவது என்பதில் நெருக்கடிகள் ஏற்பட்டன.



எனினும், 1300மில்லியன் டொலர்கள் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தினை முன்னெடுத்துச்செல்வதில் இலங்கைஅரசாங்கத்துக்கு ஏற்பட்ட நெருக்கடிகளும், சவால்களாலும் சீனா அதனை 99 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் மீளப் பெற்றுக்கொண்டது. அவ்வாறு ஏனைய திட்டங்களையும் மீளப் பெற்றுக்கொள்வதற்கு சீனாவுக்கு வாய்ப்புக்கள் காணப்பட்டன. ஆனால் அவற்றினால் இலாபமீட்டுவதற்கான ஏதுநிலைகள் சீனாவுக்கு காணப்படவில்லை.

ஆகவே, சீனாவைப் பொறுத்தவரையில் 2சதவீதம் முதல் 7சதவீதம் வரையிலான வட்டிக்கு வழங்கிய கடன்களை மீளப் பெற்றுக்கொள்வது எவ்வாறு என்பதில் கடுமையான பிரயத்தனங்கள் காணப்பட்டன. இத்தகைய நிலைமையில் தான் 'ஆட்சியாளர் எங்களுடையவர்' என்று தோழமை பாராட்டக்கூடிய அளவில் காணப்பட்ட அநுர தலைமையிலான ஜே.வி.பி ஆட்சிக்கு வந்தது.



அநுர ஆட்சியில் அமர்ந்து முதல் விஜயத்தினை இந்தியாவுக்கு மேற்கொண்டுவிட்டு இரண்டாவது விஜயத்தினை சீனாவுக்கு மேற்கொண்டிருந்தார். இதன்போது சீனா பிரத்தியேக விமானத்தை அனுப்பி அவரை அழைத்து மீள அனுப்பியிருந்தது விசேடமானதொரு செயற்பாடாகும்.

இந்த விஜயத்தின்போது இலங்கை, மற்றும் சீனாவுக்கு இடையில் கல்வி, சுகாதாரம், கலாசாரம், ஊடகம் என்று 15துறைகளை மையப்படுத்திய இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. தொடர்ந்து 16ஆவது ஒப்பந்தமாக ஜே.வி.பிக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும்; இடையிலான பரஸ்பர உடன்பாடொன்றும் எட்டப்பட்டது.




இந்த உடன்பாடுகள் எட்டப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் உடன்பாடுகள் எட்டப்பட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான உள்ளகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் அநுர அரசாங்கம் இழுத்தடிப்புக்களைச் செய்ய ஆரம்பித்தது.



குறிப்பாக திட்டங்களுக்கான அமைச்சரவை அனுமதிகளைப் பெறுதல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளிலும் இயலுமான வரையில் இழுத்தடிப்புக்களைச் செய்துகொண்டே இருந்தது அரசாங்கம். இதனால் சினமடைந்த இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங் இலங்கைக்கு வழங்கிய கடன்களை மறுசீரமைப்பு செய்ததால், சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு, 7 பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்பட்டதாக தெரிவித்திருந்தார்.

அவருடைய கூற்று ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு கடன் மறுசீரமைப்பினால் வழங்கிய கடனைவிட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிக இழப்பு, ஏற்பட்டிருக்கிறது. 2024 மார்ச் மாத நிலவரப்படி சீனாவின் எக்ஸிம் வங்கிக்கு கடன் மற்றும் வட்டியாக இலங்கை செலுத்த வேண்டிய மொத்த தொகை 4896.8 (3,993 மற்றும் 903.8) மில்லியன் டொலர்களாகும்.



கடன் மறுசீரமைப்பு செய்யப்பட்ட பிறகு, 2024 ஜூன் மாதம் செலுத்த வேண்டிய மொத்த கடன் 4,187 மில்லியன் டொலர்கள் என்று மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் செலுத்தவேண்டிய தொகைக்கும் மறுசீரமைப்புச் செய்த தொகைக்கும் (4896.8-4187) இடைப்பட்ட வித்தியாசம் தான் கடன் மறுசீரமைப்பினால் சீனா இழந்த தொகையாகும். அது 709.8 மில்லியன் டொலர்களாகும்.

கடன் மறுசீரமைப்புக்கு பின்னரும் சீனாவின் எக்ஸிம் வங்கி இந்த கடனை மீளப்பெற்று முடிக்கும் வரை இழப்புக்களை எதிர்கொள்ளும் என்பது உண்மை. அந்தக்கடன் கையில் வந்து


தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# சந்திப்பு வருவது கண்டு சந்திக்கும் இடங்களும் உண்டு! சந்தர்ப்பவாத தமிழ்த் தேசிய அரசியல்.!

## பா. அரியநேத்திரன்

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிடம் நேரடி யாகச் சென்று இலங்கைத் தமிழரசுக் கட்சி பதில் தலைவர் சி வி கே சிவஞானம் ஆதரவைக் கோரிய விடயம் கடந்த (06/06/2025) வாரங்களில் பேசும் பொருளாகவும் முதன்மை செய்தியாகவும் ஊடகங்களில் இடங்களை நிரப்பியதை காண முடிந்தது.

நேரடியாகவே சந்தித்து ஆதரவு கேட்ட தமிழரசுக் கட்சியின் இந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத்தேர்தல் 2018, ல் கலப்பு முறைத்தேர்தலாக அறிமுகமாகிய பின்னர் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கும் அனேகமான கட்சிகள் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலைமைகளால் கட்சியின் அடிப்படை கொள்கையை விட்டு கதிரைகளுக்காக கூட்டுச் சேரும் நிலைகளில் ஒன்றாகவே இதனை நோக்க முடிகிறது.



தமிழரசுக்கட்சி பதில் தலைவர் சி வி கே சிவஞானத்தை பொறுத்தவரை அவர் ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தாவின் நீண்டகால உறவுக் காரர். அவரே வெளிப்படையாக தாம் ஶ்ரீதர் தியேட்டருக்கு இன்று நேற்றல்ல பல தடவை சென்றதாக வெளிப்படையாகவே கூறியுள்ளார். அவர் நட்பு வைப்பது உறவு கொண்டாடுவது அவருடைய தனி விருப்பம் அதனை தமிழ்தேசிய கொள்கையை சிதைப்பவர்களுடன் கட்சி கொள்கைக்கு எதிரானவர்களுடன் கூட்டிணைவதை எவருமே ஏற்க மாட்டார்கள்.

வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியத் தரப்பாக ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கு பல தடவைகள் தமிழரசு கட்சியுடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எடுத்துக்கொண்ட முயற்சிகள் உதாசீனப் படுத்தப்பட்டன. இதன்பின் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கும் தமிழ் தேசிய பேரவைக்கும் இடையிலான கொள்கை ரீதியான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இது சாதாரணமாக ஏற்படுத்தப் படவில்லை. பல விட்டுக்கொடுப்புகள் அரவணைப்புகளின் அடிப்படையில் தான் சாத்தியமானது.

இதன் பின் தோன்றிய அரசியல் சூழ் நிலை மாற்றங்களில் வன்னி நிலப்பரப்பில் தமிழ் தேசிய கட்சிகளின் கைகளில் சபைகளை வலுப் படுத்துகின்ற நிலைப்பாடு பற்றி பேசவே நாங்கள் அழைக்கப் பட்டோம்.

அதன் பிரகாரம் திங்கள் மதியம் தமிழரசு கட்சியின் பதில் தலைவர்-சி வி கே சிவஞானம் அவர்கள் அலுவலகத்தில் அக்கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அவர்களுடன் சந்திப்பு நடைபெற்றது.



அதன்போது வன்னியின் அரசியல் சூழ் நிலை பற்றி கலந்துரையாட முற்பட்ட வேளையில் யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறதோ அதற்கான பதில் நடவடிக்கை வன்னியில் அமையுமென தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

உண்மையில் கதிரைகளுக்காக தமிழ்தேசிய கட்சிகள் யாரோடும் சேரலாம், யாரோடும் ஆட்சியமைக்கலாம் என முனைப்பு காட்டுபவர்கள் கொள்கைக்காகவும் தமிழ்மக்களின் உரிமை சார்ந்த அரசியல் தீர்வு சார்ந்த விடயங்களில் ஒன்றுபடுவதில்லை என்பதையே காணமுடிகிறது.

இதற்கு நல்ல உதாரணம் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்த சி வி விக்னேஸ்வரன் உடைய மான் சின்னத்தை கொண்ட தமிழ் மக்கள் தேசிய கூட்டணியை இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி பதில் செயலாளர் சுமந்திரன் ஆதரவு கேட்டுள்ளதும் கொள்கை இல்லை கதிரை என்பதையே காட்டுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை ஆனால் தமிழ் பொதுவேட்பாளரைஆதரித்து மேடை மேடையாக பேசி பிரசாரம் செய்த வேறு கட்சிக்காரர்களின் ஆதரவை பெறலாம் இதுவும் ஒரு வகையான சந்தர்ப்பவாத அரசியலாகவே கருதலாம்.

ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தாவை பொறுத்தவரை அவருடைய செயற்பாடுகள் எப்போதுமே தமிழ்த்தேசிய அரசியலை சிதைவுற வைத்து இனப்படுகொளை, ஜனாதிபதி மகிந்தராஜபக்சவுடன் ஒட்டி உறவாடி தாம் அமைச்சு பதவிகளை பெற்று தொடர்ந்தும் தமிழினத்தின் துரோக செயல்பாடுகளை முன் எடுத்தோராகவே ஈழத்தமிழர்களால் அவர் அடையாளப்படுத்தப்பட்டவர்.

இவ்வாறான ஒருவருடன் பகிரங்கமாக தமிழரசுக்கட்சி பதில் தலைவர் எந்த கூச்சமும் இன்றி அவருடைய சிறிதர் தியேட்டர் பணியகத்தில் சென்றதும், அதில் சி வி கே சிவஞானம் நடந்துகொண்ட விதமும் மக்கள் மத்தியில் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது என்பது உண்மை.

சிலர் கூறலாம் கடந்த 2018, உள்ளூராட்சி சபைத்தேர்தலிலும் ஈபிடிபியின் ஆதரவை தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏன் தமிழ்தேசிய மக்கள் முன்னணி எல்லாம் பெற்று சில சபைகளில் ஆட்சியமைத்த வரலாறுகள் உண்டு. இந்த 2025, உள்ளூராட்சி சபையில் அப்படியான ஈபிடிபியின் ஆதரவை பெறுவதில் எந்த தப்பும் இல்லைத்தானே என கூறலாம்.

ஆதரவு தெரிவிப்பது என்பதும், ஆதரவுக்காக படம் காட்டி வலிந்து சென்று அங்கிருந்து ஊடகங்களில் பரப்புரை செய்வது என்பதும் வித்தியாசமானது. 2018, ல் இவ்வாறு பகிரங்கப்படுத்தி ஆதரவு எடுக்கவில்லை. சில சபைகளில் ஆட்சியமைத்த பின்னரே யாரோடு ஆட்சியமைத்தனர் என்பது கூட தெரியவந்தது.

2025, உள்ளூராட்சிசபைத்தேர்தலில் வடமாகாணத்தில் கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஏனைய தமிழ்தேசிய கட்சிகள் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியுடன் இணைந்து சபைகளில் ஆட்சியமைக்க பகிரங்கமாக கூறிய போதும் அவர்களுடன் உடன்படாமல் இப்படியான ஈபிடிபி டக்ளஸ் உடன் உறவு கொண்டாடியது ஏற்கமுடியாது.



யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பியையும், மட்டக்களப்பில் ரிம்விபியையும் ஒரே திராசில் வைத்து எடைபோடுவதே ஈழவிடுதலைப்போராட்ட காலம் தொட்டு இன்றுவரையும் தமிழ் மக்களின் மனநிலையில் உள்ளது. அவ்வாறான நிலையில் பதவிக்காக பணிந்து இவ்வாறான விரோத எண்ணம் கொண்டவர்களுடன் கூட்டுவைப்பது என்பது எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்




கிண்ணியான்

சூழல் என்பது மனிதனை சுற்றியுள்ள அனைத்தும் என்பதை எடுத்துக் காட்டுவதுடன் சூழலை பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனதும் கடப்பாடாகும்.

இதன் ஒரு பகுதியாக சூழல் மாசடைவு என்பது இயற்கை மற்றும் மனித செயல்களால் ஏற்படும் மாசடைவு ஆகும், இது மனிதர்களின் வாழ்க்கை முறையும், உயிரினங்களின் வாழ்வும், பூமியின் நிலத்தன்மையும் மீது தீவிரமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. மனிதனது பல நடவடிக்கைகளால் சூழல் மாசடைகிறது.

சூழல் மாசடைவின் முக்கிய தாக்கங்களாக மனித உடல்நலத்தின் மீதான தாக்கங்களும் பங்கு வகிக்கின்றது .இதில் காற்று மாசடைவு காரணமாக தும்மல், ஆஸ்துமா, சுவாசக் கோளாறுகள், நுரையீரல் புற்றுநோய் போன்ற பல சுவாசநோய்கள் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும் சூழல் மாசடைவு என்பது பல வழிகளில் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

**தண்ணீர் மாசடைவு:**

வயிற்றுப்போக்கு, நெருப்பு காய்ச்சல், கொலரா போன்ற நீர் மூலம் பரவும் நோய்களாகும்.



**நிலம் மாசடைவு:**

உணவுப் பயிர்கள் மீது பாதிப்பு, விஷச் சேர்க்கைகள் உணவுக்கு ஊடுருவுவதால் உடல்நல பாதிப்பு ஆகும்.

**விலங்கு மற்றும் தாவரம் மீது தாக்கம்:**

வனவிலங்குகள் வாழும் சூழல் பாதிக்கப்படுகிறது.



இது போன்று கடல் உயிரினங்கள் பிளாஸ்டிக் மற்றும் கழிவுகளால் பாதிக்கப்படுகின்றன.

இவை அனைத்தும் நம்மை மற்றும் எதிர்கால தலைமுறையை பாதுகாக்க முக்கியமான விடயங்களாகும்.



சுற்றாடல் தினமானது ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 05ம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. இவ் வருடம் மே 30 தொடக்கம் ஜூன் 05 வரை சூழல் தினம் கொண்டாடப்பட்டது. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊடாக புதியதொரு திட்டமாக கிளீன் ஸ்ரீலங்கா எனும் தொனிப்பொருளின் கீழ் பல சுற்றாடல் நிகழ்வுகள் இடம் பெற்றன.

குறிப்பாக சூழல் தொடர்பில் சற்று பார்க்கின்ற போது குடியிருப்பு பகுதிகள்,வீதிகளில் சேரும் கழிவுகளை உள்ளூராட்சி மன்றங்கள் முறைகேடாக குப்பை தொட்டிகளாக சேமிப்பதால் அப்பகுதிகளினை அண்டிய மக்கள் பல இடர்களை எதிர் நோக்குகின்றனர். இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுதல், யானைகளின் படை எடுப்பு போன்றனவும் இடம் பெற்று வருகின்றன.



திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் கிண்ணியா நகர சபைக்கு சொந்தமான குப்பை சேகரிக்கும் பகுதி சின்னத்தோட்டத்தில் உள்ளது. இது போன்று திருகோணமலை மாநகர சபைக்கானது கன்னியா பகுதியிலும் தம்பலகாமம் பிரதேச சபைக்கு சொந்தமான குப்பை மேடு ஜெயபுரவில் உள்ளது. இதனால் பல பகுதிகளில் இருந்து வரும் யானைகள் இந்த குப்பைகளை உண்பதற்கு வருகின்றன. அதே நேரம் துர்நாற்றமும் வீசுகின்றதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை அண்டிய மக்கள் பல போராட்டங்களை குப்பை மேட்டுக்கு எதிராக நடத்தியுள்ளனர். இப் பகுதி ஊடாக பயணிக்க முடியாது உள்ளதுடன் பாலம் போட்டாறு பகுதியில் வாழும் மக்கள் துர்நாற்றத்தை சுவாசிக்க வேண்டியுள்ளதாகவும் யானை தாக்குதல்களுக்கும் இலக்காகி வருவதாக தெரிவிக்கின்றனர்.

எங்களது ஊரில் காட்டு யானைகளின் தொல்லை அதிகம் இதற்கான காரணம் குப்பை மேடுதான். குப்பைகளை கொட்டுவதை நிறுத்தக் கோரி பல ஆர்ப்பாட்டங்கள் செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. பேருந்து ஏறுவதற்காக காத்திருக்கும் போது இந்த குப்பைகளின் துர்நாற்றம் தாங்க முடியாது. அது மட்டுமன்றி இங்கு பாதுகாப்பான யானை வேலி இல்லை. இந்த யானை பிரச்சினையால் ஊருக்குள் நிம்மதியாக வாழ முடியாது. மாலை 5 மணிக்கே யானைகள் ஊருக்குள் புகுந்து அட்டகாசங்களை மேற்கொள்வதுடன் எங்களது நெற்செய்கை விவசாயம் தோட்டச் செய்கைகளை அழித்து விடுகின்றன. கச்சான் போன்ற பயிர்களையும் துவம்சம் செய்து விட்டு செல்கின்றன. இங்கு குப்பை கொட்டுவதனால் அங்குள்ள விலங்குகள் அதனை சாப்பிட்டு விட்டு ஊருக்குள் வருவதனாலும் பல தொற்று நோய்களும் ஏற்படுகின்றன.



இவ்வாறானவற்றில் இருந்து பாதுகாக்க குப்பை மேட்டை அகற்றி பாதுகாப்பான யானைகள் வேலியினை அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என பாலம்போட்டாறு பத்தினிபுர கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொருளாளர் ஜீ.விதுர்சியா (வயது_27) தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இவ்வாறான நிலையில் சூழல் மாசடைவு என்பது பல உயிர் ஆபத்துக்கள் உள்ளிட்ட பல நோய்களையும் ஏற்படுத்துகின்றதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக 2019ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான கடந்த ஆறு ஆண்டுகளில், யானை – மனித மோதல்களால் இலங்கையில் 2,425 காட்டு யானைகளும் 961 பொதுமக்களும் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் சமீபத்திய அறிக்கைகளில் அவதானிக்க

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இன்றைக்கு தமிழ் அரசியல் பரபரப்பாக இருக்கின்றது. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

1: உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகத்தை யார் அமைக்கிறது என்ற அந்த போட்டி.

2 தமிழ் தேசிய பேரவை மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கும் இடையே நடந்த ஒப்பந்தமும். அதன் பின்னால் முன்னால் செய்யப்படுகின்ற அரசியல். இது இன்றைக்கு பேசு பொருளாகி அது பல்வேறு பரிமாணங்களை எடுக்கின்றநிலைமையை நாங்கள் பார்ப்போம்.

இதில் மிகவும் முக்கியமானது, தமிழ் தேசிய பேரவைக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கும் இடையில்இடம்பெற்ற அந்த புரிந்துணர்வு உடன்படிக்கை. அந்த ஒப் பந்தத்தின் உள்ளடக்கத்தில் 5 விடயங்கள் முக்கியமாக இருக் கின்றன.

1: தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப் படையில் அரசியல் தீர்வு ஒன்றைக் காணுதல்.

2: 13வது திருத்தத்தை தீர்வாக ஏற்றுக் கொள் வதில்லை.



# தாயகத்தில் நடைபெறுகின்ற அரசியல் கட்சிகளின் கூத்துகள் அல்லது பிறழ்வுகள் குறித்து

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம்

3: நல்லாட்சி காலத்தின் ஐக்கியராட்சியத்தின் யோசனையை நிராகரிப்போம்.

4: இன அழிப்புக்கு ஒரு சர்வதேச விசாரணை வேண்டும்.

5: முஸ்லிம் மக்களுக்கான தீர்வு தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடுவது.

தமிழரசியலில் முக்கியமாக கருதப்படு கின்ற விடயங்கள் எல்லாம் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த ஒப்பந்தத்துக்கு பல காரணங்கள் இருக்கின்றன.

1: தேசிய மக்கள் சக்தியினுடைய எழுச்சி.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக வடபகுதியில் கூடுதலான ஆசனங்களையும் பெற்றிருந்தது.

இந்த நிலை, தமிழ் தேசிய அரசியலை முழுமையாக அடியோடு அழித்து சென்றுவிடும் என்கின்ற ஒரு அச்சம் உருவாகியது. அதனை எப்படியாவது கீழ் இறக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் கட்சிகளுக்குள் ஆயிரம் பிளவுகள் இருந்திருந்தாலும் கூட தேசிய மக்கள் சக்தியை எதிர்ப்பது என்பதில் அவர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டார்கள். அந்த ஒருங்கி ணைந்து செயல்பட்ட காரணமாகதான் தேசிய மக்கள் சக்தியை தமிழர் தாயகத்தில் இரண்டாவது நிலைக்கு தள்ளியது. இன்றைக்கும் இரண்டாவது இடத்தில் இருக்கிற தேசிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்த வேண்டிய தேவை ஒன்று இருக்கின்றது.

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு ஆய்வாளர் யோதிலிங்கம் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது. இந்த நேர்காணலை காணொளியில் முழு மையாக பார்வையிட YouTube இல் முழுமையாகப் பார்ப் பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

2: உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி நிர் வாகத்தை கைப்பற்றுதல் குறிப்பாக தேசிய மக்கள் சக்தி கைகளுக்கு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி நிர் வாகம் சென்றுவிடாமல் தடுப்பது என்ற விடயமும் முக்கியம்.

3: மக்களினுடைய அபிலாசகளுக்கு மதிப்பளிப்பது மக்களை பொறுத்தவரையில் ஒருங்கிணைந்த அரசியலை அவர்கள் மிகவும் விருப்பத்தோடு பார்க்கின்றனர். ஆகவே இந்த ஒருங்கிணைந்த அரசியலுக்கு மதிப்பளிப்பதும் ஒரு நோக்கமாக இருந்தது.

4: மக்களை தேசமாக ஒருங்கிணைக்க வேண்டும் தேசமாக ஒருங்கிணைப்பது என்றால் ஒருங்கி ணைந்த அரசியல் தான் அது சாத்தியமாகும் என் கின்ற விடயங்களும் இருந்தது.

இந்த நான்கு விடயங்களும்தான் இந்த ஒப்பந்தத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன என்று நான் நினைக்கிறேன்.இதேவேளை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய தலைவர் இந்த ஒப்பந்தத்துக்கு முன்வந்தமைக்கும் கூட பல காரணங்கள் இருக்கின்றது. அவர் இவ் வளவு காலமும் இந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பை கடுமையாக விமர்சனம் செய்த வர்கள்,

பின்னர் பாராளுமன்ற தேர்தலை தொடர்ந்து ஒரு ஒருங்கிணைந்த அரசியலுக்கு அவர்களையும் இழுத்து கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை செய்தனர். கஜேந்திரகுமார் இவ் வாறு மாறியமைக்கு சில பிரதானமான காரணங்க ளில்....

1: பாராளுமன்ற தேர்தலில் அவர்களுக்கு ஏற் பட்ட பின்னடைவு. அதாவது கடந்த பாராளு மன்றத்துக்கு முதல் இடம் பெற்ற பாராளுமன்ற தேர்தலில் பெற்ற வாக்குகளின் அரைவாசி வாக்கு களை கூட இவர்களால் பெற்றுக்கொள்ள முடிய வில்லை.

ஆகவே இந்த ஒருங்கிணைந்த அரசியலுக்கு செல்லாமல் தங்களுடைய இருப்பை பேண முடியாது என்கின்ற விடயம் அவர்களுக்கு தெரிந் திருந்தது.

2: கஜேந்திரகுமார் அடிப்படையில் ஒரு தமிழ் தேசியவாதி. தமிழ் தேசிய கொள்கைகளில் மிகுந்த அக்கறை உள்ளவராக இருப்பதனால் இந்த தேசிய மக்கள் சக்தியினுடைய வளர்ச்சி தமிழ் தேசிய அரசியலை சிதைத்துவிடும் என்கின்ற அச்சமும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

கட்டுரை

# 'காணிகள்' வர்த்தமானியை மீளப்பெறுவதே ஒரே தீர்வு

நன்றி – ஆர்.ராம் ஆசிரியர் வீரகேசரி

*(சென்றவாரத்தொடர்ச்சி...)*

வடக்கிலும், கிழக்கிலும், அரச படைகள், பௌத்த தேரர்கள் மற்றும் கட்டமைப்புக்கள், வன பாதுகாப்பு திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்ட அரச நிறுவனக் கட்டமைப்புக்கள் ஏட்டிக்குப் போட்டியாக காணிகளை கபளீகரம் செய்து வருகின்றமை தொடர்கதையாகவே இருக்கின்றன. அவ்வாறான நிலையில் வெளியிடப்பட்டுள்ள 'காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவுக்கு அமைவாக மார்ச் 28ஆம் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பட்டியலிடப்பட்டுள்ள காணிகள் குறித்த உரித்துக்கள் உறுதி செய்யப்படாதவிடத்து கட்டளைச்சட்டத்தின் (5)1இற்கு அமைவாக அரச காணிகளாக பிரகடனப்படுத்தப்பட்டு அவைபற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படும்' என்ற வர்த்தமானியில் அடையாளம் காணப்பட்டுள்ள காணிகளை உற்று நோக்குகின்றபோது தற்போதைய அரசாங்கத்தின் சூட்சுமமான மற்றொரு நோக்கத்தையும் இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள முடியும். அந்த நோக்கம் தமிழ் மக்களின் இருப்பையும், வாழ்வாதாரத்தையும் சிதைக்கும் அதிபயங்கரமானதும் கூட.



வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், முல்லைத்தீவின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அம்பலவன் பொக்கனை, முள்ளிவாய்க்கால் கிழக்கு மற்றும் மேற்கு, கிராமசேவர் பிரிவுகளும், கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளியில் உள்ள கரையோர கிராமங்கள், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் உள்ள கரையோரக் கிராமங்கள் மற்றும் மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அருவியாற்றின் ஒருபகுதியைச் சேர்ந்த கிராமங்கள் அடையாளமிடப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்திருக்கும் விடயம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகள் போரின் கோரத்துக்கு உள்ளானவை. அங்கு மக்கள் தொகை குறைவு. மீள்குடியேறி இருப்பவர்கள் கூட உரிய ஆவணங்களை வைத்திருப்பார்களா என்பது சந்தேகம் தான். இதனைவிடவும் மேற்படி பகுதிகளில் வாழ்ந்தவர்கள் புலம்பெயர்ந்தும் இருக்கின்றார்கள். அவர்கள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் தங்களின் காணி உரித்தை உறுதிப்படுத்துவது என்பது காணல் நீரான விடயம்.

ஆகவே, அடையாளமிடப்பட்ட காணிகளை நிச்சயம் கையகப்படுத்த முடியும் என்ற பெரு நம்பிக்கை அரசாங்கத்துக்கு நன்றாகவே உள்ளது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறான நிலையில் அரசாங்கத்தின் சூட்சுமத்திட்டத்தை முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து ஒவ்வொன்றாக நோக்கினால் அடையாளம் காண்பதற்கு இலகுவாக இயலுமானதாக இருக்கும்.

கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 72கிலோமீற்றர் நீளமான ஆழ்கடலை அடியொற்றிய கடற்கரை நிலங்கள் காணப்படுகின்றன. அம்பலவன்பொக்கனை கிராம சேவகர் பிரிவின் சாலை கிராமத்திலிருந்து வட்டுவாகல் வரையில் 21 கிலோமீற்றர்களும், வட்டுவாகலில் இருந்து கொக்குத்தொடுவாய் வரையில் 51 கிலோமீற்றர்களும் உள்ளன.

இதற்குள் அம்பலவன் பொக்கனை, சாலை, புதுமாத்தளன், வலைஞர்மடம், கரையாமுள்ளிவாய்க்கால், வெள்ளமுள்ளிவாய்க்கால் உள்ளிட்ட கரையோரக் கிராமங்களும் உள்ளடக்குகின்றன.



ஏற்கெனவே 2007ஆம் ஆண்டு வெளியான மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கொக்குகிளாய் முதல் வட்டுவாகல் வரையிலான பகுதி நீட்டிக்கப்பட்ட 'மகாவலி எல்' வலயத்துக்குள் வலிந்து உட்புகுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு இருக்கையில் எஞ்சியிருக்கின்ற ஆழ்கடலை மையப்படுத்திய கடற்கரை காணிகளை கையகப்படுத்துவதற்காகவே தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் நடைமுறையாகின்றபோது, முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படுகின்ற 72 கிலோமீற்றர் நீளமான ஆழ்கடல் கடற்பரப்பைக் கொண்ட நிலங்கள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் நேரடியாகச் சென்றுவிடும்.

அடுத்ததாக, தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை வரலாறு நெடுகிலும் அடையவிடாது தடுப்பதற்காகவே கொக்குத்தொடுவாயில் கடற்கரையோரமாக 213 தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டு முல்லைக்கடலில் சட்டவிரோத மீன்பிடி முறைமைகள் உட்பட 'தாராளமாக' கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கடற்படையும் அதற்கான 'முழுமையான ஒத்துழைப்பை' வழங்கிவருகின்றது.

அப்படியிருக்கையில், எஞ்சிய ஆழ்கடலை மையப்படுத்திய கடற்கரைக் கிராமங்களின் நிலங்களை அரசுடைமையாக்குவதன் மூலமாக மேலும் திட்டமிட்ட தென்னிலங்கை சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான ஏதுநிலைமைகளை இலகுவாக உருவாக்க முடியும். அத்தோடு தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை மட்டுமல்ல முல்லைத்தீவின் குடிப்பரம்பலையும் மாற்றியமைக்க முடியும்.

அதனை தற்போதைய அரசாங்கமும் விரும்புகின்றது என்பதற்கு வன்னி மாவட்டத்துக்கு பொறுப்பாக இருக்கும் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தேர்தல்காலச் செயற்பாடுகள் சான்றுரைக்கின்றன.

முல்லைத்தீவின் கொக்குத்தொடுவாயில் இருந்து கிளிநொச்சியின் பச்சிலைப்பள்ளி, யாழ்ப்பாணத்தின் மருதங்கேணி வரையில் அடையாளமிடப்பட்ட கரையோரக் காணிகள் கையகப்படுத்தப்பட்டால் 'வடபிராந்தியத்தின் கிழக்கு கடற்பகுதி' அரசாங்கத்தின் பூரணமான கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிடும்.

குறித்த பகுதிக்குள் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதரத்தை பேணும் கடல்வளம் கொழிக்கும் கடற்பரப்பைத் தாண்டி 'கனிம வளங்கள்' நிறைந்த கடற்கரையோரங்களும் உள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இதனைவிடவும், 'திருகோணமலை கொக்கிளாய்-கொக்குத்தொடுவாய்-முல்லைத் தீவு-முள்ளிவாய்க்கால்-அம்பலன்பொக்கனை-சாலை-சுண்டிக்குளம்-மருதங்கேணி-பருத்தித்துறை' வரையில் கடற்கரையை அண்மித்ததாக தரைவழி வீதியொன்றை அமைப்பதற்கான திட்டம் வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் உள்ளது.

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை வரையிலான இந்த வீதியமைப்பு திட்டம் தற்போது கிடப்பில் இருந்தாலும் போரின் பின்னரான சூழலில் கொக்குத்தொடுவாயிலிருந்து புல்மோட்டைக்கு பாலம் அமைக்கும் திட்டத்துக்கு சமாந்தரமாக 'இந்திய' தரப்புக்களால் ஒருசில சந்தர்ப்பங்களில் விருப்புடன் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டது. களவிஜயங்களும் நடத்தப்பட்டிருக்கின்றன.

அப்படியிருக்கையில், தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டுக்கும், இலங்கை, ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைந்த வடகிழக்குக்கும் முழுமையான எதிர்நிலைப்பாட்டில் உள்ள ஜே.வி.பி. தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் அமர்ந்திருக்கிறது.

ஆகவே தான் பருத்தித்துறை, திருகோணமலை கரையோர வீதித் திட்டத்தினை அடையாளமின்றி சிதைப்பதற்கு 'காணி' சுவீகரிப்பு நடவடிக்கையை திட்டமிட்டு முன்னெடுக்கின்றது என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

அதேநேரம் மன்னாரில் அருவியாறுக்கு அண்மித்த பகுதி அடையாளமிடப்பட்டுள்ளது. அது 'கீழ் மல்வத்து ஓயா' திட்டத்தின் அங்கத்துக்குள் வருகின்ற நிலப்பரப்பாகும். ஆகவே, மல்வத்து ஓயா திட்டத்தினை தடையின்றி முன்னெடுப்பதற்கு முன்னேற்பாடாகவே அண்மித்த பகுதிகளில் உள்ள காணிகளை கையகப்படுத்தும் செயற்பாட்டை பார்க்க வேண்டியுள்ளது.



அநுர அரசாங்கம் உட்பட சிங்கள தேசியத்தின் மேற்படி பல்நோக்கு இலக்குகளைக் கொண்ட வர்த்தமானி மீளப்பெறப்பட்டால் மட்டுமே தமிழ் மக்களினதும், தமிழ்த் தேசத்தினதும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஒரு இனத்தைக் குறிவைத்துக் கொல்வது இனப்படுகொலையா,,,,,,,!



## பகுதி–03 (இறுதிப்பகுதி)

வல்வை ந.அனந்தராஜ்

### 7. கிழக்குத் திமோர் மக்களின் படுகொலைகள்:

கிழக்கு திமோர் இனப்படுகொலை என்பது, இந்தோனேசியாவினால் கிழக்கு திமோர் ஆக்கிரமிக்கப் பட்டபின்னர், இந்தோனேசியா அரசாங்கத்தினால், மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாதத்தின் விளைவாக திமோர் மக்களின் இனப்படுகொலையைக் குறிக்கின்றது. 1600ஆம் ஆண்டில் இருந்து 1975 ஆம் ஆண்டுவரை போர்த் துக்கல்லினால்,கிழக்கு திமோர் ஆளப்பட்டு வந்தது. 1975 இல் போர்த்துக்கல்லில் இருந்து சுதந்திரம்பெற்ற சிறிது காலத்திலேயே, இந்தோ னேசியா, கிழக்குத் திமோரை ஆக்கிரமித்துத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. அதனைத் தொடர்ந்து, கிழக்குத் திமோர் மக்கள் பல்வேறு அடக்கு முறைகள், கல்வி அறிவை வழங்காதிருத்தல், கைது செய்யப்படுதல், காணா மல் போகச்செய்தல், சித்திரவதைகள் போன்ற வற்றை அனுபவித்தனர். இந்தநிலையில், இந் தோனேசியாவில் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகாக 1975இல் இருந்து 1999ஆம் ஆண்டுவரை போராடிப் பாரிய அழிவுகளைச் சந்தித்தது. குறுகிய காலத்திற்குள் போரை முடிவுக்குக் கொண்டுவந்து, 2002 ஆம் ஆண்டில் அதனை இந்தோனேசியாவில் இருந்தும் மீட்டெடுத்தது. இந்தப் போராட்டத்தின்போது 100,000 தொடக்கம் 300,000 வரை திமோர் மக்கள் கொல்லப்பட்டதுடன், 50,000க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

### 8. கோலதமோர் (Holodomor) இனப்படுகொலை, அல்லது பட்டினியாலான படுகொலைகள்:

கோலதமோரில் ஏற்படுத்தப்பட்ட பஞ்சத்தின் அளவை ஒப்புக்கொள்ளும் வகையில், 1932– 33 பஞ்சம் பெரும்பாலும் ஹோலோடோமர் என்று அழைக்கப்படுகிறது,பிடும் வகையில் இது பசி (ஹோலோட்) மற்றும் அழித்தல் (மோர்) என் பதற்கான உக்ரேனிய வார்த்தைகளிலிருந்து பெறப்பட்ட ஒரு சொல்லே கோலதமோர் ஆகும். 1932ஆம் ஆண்டு தொடக்கம் 1933ஆம் ஆண்டு வரையில்; உக்ரேனில்; நடந்த இனப்படுகொலை பட்டினிபோட்பபட்டே இடம்பெற்றது. இந்தப் பட்டினிப் படுகொலைகளுக்கான முக்கிய காரணம் அக்கால சோவியத் ஒன்றியத்தின் தலைவர் ஸ்ராலினின் கொள்கை ஆகும். உக்ரேனிய தேசிய வாதத்தை தகர்க்க உக்ரேனில் இருந்த எல்லா உணவு மூலங்களும் சோவியத் ஒன்றியத்தினால் வெளியேற்றப்பட்டன. சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதி ஸ்ராலினின் கொள்கைக்கு அமைய உக்ரேனில் இருந்து எவரும் வெளியேறவும், உள்வரவும் தடைசெய்யப்பட்டது. உக்ரைனில் பொதுமக்களைப் பட்டினிபோடும் வகையில் சோவியத் ஒன்றியம் ஏற்படுத்திய செயற்கை உணவுப் பஞ்சத்தில் 7மில்லியன் ; வரையான உக்கிரேனியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**உக்கிரேனில் உள்ள நினைவுச் சின்னம்**



மனிதர்களினால் செயற்கையாக ((Man made famine) ஏற்படுத்தப்பட்ட பட்டினியால் கொல்லப்பட்ட கோலதமோர் மக்களின் நினைவாக உக்கிரேனில் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் 1932 முதல் 1933 வரை சோவியத் உக்ரைன் குடியரசை உலுக்கிய மனிதனால் உரு வாக்கப்பட்ட பஞ்சம், 1933 வசந்த காலத்தின் பிற்பகுதியில் உச்சத்தை எட்டியது. இது பரந்த சோவியத் பஞ்சத்தின் (1931–34) ஒரு பகுதியா கும், இது சோவியத் ரஷ்யா மற்றும் கஜகஸ்தானின் தானிய விளைச்சல் பகுதிகளில் பெரும் பட்டினி யையும் ஏற்படுத்தியது.

இருப்பினும், உக்ரைனியப் பஞ்சம், பெரும்பாலும் அல்லது உக்ரைனை மட்டுமே இலக்காகக் கொண்ட தொடர்ச்சியான அரசியல் ஆணைகள் மற்றும் முடிவுகளால் கொடியதாக மாற்றப்பட்டது.

### 9.இரண்டாம் உலகப் போரின்போது, மணிலாவில் நடந்த படுகொலைகள்:

மணிலா படுகொலை (Filipino: Pagpatay sa Maynila) மணிலாவின் பாலியல் வன்கொடுமை ; என்றும் அழைக்கப்படுகிறது, இது பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலா நகரில் பிலிப்பைன்ஸ் குடிமக்களுக்கு எதிராக ஜப்பானிய துருப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களை உள்ளடக் கியது.

**யப்பானிய படையால் கொல்லப்பட்ட பிலிப்பைன்ஸ் குழந்தைகள்**



1945ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் பிலிப் பைன்சின் மணிலாவின் பொதுமக்கள் மீது இம்பீரியல் ஜப்பானிய துருப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் பசிபிக் பிராந்தியத்தில் இரண்டாம் உலகப் போரின் போது இடம்பெற்ற பயங்கரமான துயரங்களில் ஒன்றாகும். இதில் மணிலா நகரில் சுமார் 100,000 பொதுமக்கள் கண்மூடித்தனமாக திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர்.

### 10. ரோஹிங்கியா இனப்படுகொலைகள்:

மியன்மாரில், ரோஹிங்கியா இனத்திற்கு எதி ராக அந்நாட்டு அரசாங்கமும் அந்நாட்டின் தேசிய இனமும் புரியும் கொடூரங்களையும் கொடுமை களையும்கூட இன்றும் இந்த உலகநாடுகள் வாய்மூடி மொளனிகளாக இருந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன.

**மியன்மார் அரசபடைகளினால் கொல்லப்பட்ட ரோகிங்யோ மக்கள்**



**கொல்லப்படுவதற்கு முன்னர் முட்டுக்காலில். இருத்தி சித்திரவதை செய்யப்பட்ட**



**இளைஞர்கள்**

**மியன்மாரின் மனிதப் புதைகுழிகளில் ஒன்று**



தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தமிழர் தேசமும்






# தொடரும் காணி அபகரிப்புகளும்...

ஈழமணித் திருநாட்டின் வடக்கு கிழக்கு எனும் தமிழர் தேசத்தின் தேசியம் எனும் உயிர் நாடியின் நாடித்துடிப்பான நிலம் எனும் வளம் நிறைந்த நல்லாளைக் கவர்ந்து, என் தேச விடுதலைக் கனவுகளைச் சிதைக்கும் சிந்தனை கொண்டவர்களாக, மாறி மாறி வரும் ஒவ்வொரு பௌத்த பேரினவாத சிந்தனையில் ஊறிய ஆட்சியாளர்களும் நகர்த்தும் நகர்வுகள் தான் இனவழிப்புக்கு நிகராக நாம் கருதும் காணி அபகரிப்புகள்.



ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாக இருந்தால் நேரடியாக அவர்களின் உயிரைப் பறித்தல் என்பதை விடவும் மோசமான செயல் அவர்களின் வாழ்விடங்களை, நிலங்களை, அழிப்பதும் கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை அழிப்பதும், மொழியை அழிப்பதுமாகும். அவற்றில் இந்த பௌத்த பேரினவாதம் தொடர்ந்தும் பல வழிகளிலும் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகம் எங்கும் தமிழர் நிலங்களை அபகரிக்கும் சதி முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.



அதற்காக நல்ல பல போதனைகளை வழங்கிச் சுக,போகங்களைத் துறந்து வந்த புத்தர் எனும் மகானை ஆக்கிரமிப்புகளின் சின்னமாக்கி அவரது சிலைகளை நிறுவுதல், அதனைத் தொடர்ந்து பௌத்த ஆலயங்களை அமைத்தல் அதனை ஒட்டியதான சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துதல் அதற்காகக் காணிகளை அபகரித்தல் அல்லது கபளீகரம் செய்தல், தொல்லியல் எனும் போர்வையில் தமிழர் தேசத்துக் காணிகளை அபகரித்தல், வனஇலாகா எனும் போர்வையில் அபகரித்தல், முப்படைகளின் தளங்கள் எனும் போர்வையிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களையும் அபகரித்தல் என பல்வேறு கட்ட காணி அபகரிப்புகள் தொடரும் சோகமாகத் தமிழர்களை வாட்டுகிறது.

**தாமோதரம் பிரதீவன்,**
மனித உரிமை செயற்பாட்டாளர்,
அம்பாறை மாவட்டம்

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிகழ்த்தி இலட்சக்கணக்கான உறவுகளின் உயிர்களைப் பறித்துவிட்டு அதனைத் தொடர்ந்து எமது தேசத்தின் வளம் கொளிக்கும் நிலங்களையும், இயற்கை வளக் கொடைகளையும் சுரண்டியும், அபகரித்தும், அழித்தும் அடங்காத இவர்களின் கோரத்தாண்டவத்தின் உச்சம் இன்று அரச வர்த்தமானி மூலம் பாராளுமன்றச் சட்டம் போட்டுக் காணி அபகரிக்கும் அடுத்த அபாயகரமான வடிவம் பெற்றதை அறிந்து ஆடிப் போன தமிழர்களின் இதயத் துடிப்பில் இடி இறங்கியதாகவே காணப்பட்டது.



வடக்கு கிழக்கு எனும் தமிழர் தாயக தேசத்தின் பல மாவட்டங்களிலும், பல பிரதேசங்களிலும் நடந்துள்ள திட்டமிட்ட காணி அபகரிப்புகளுக்கான தீர்வுகளின்றி இன்னமும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடிவரும் நிலையில் அவர்களுக்கு துணையாக அவர்கள் தெரிவு செய்த சில மக்கள் பிரதிநிதிகளும் குரல் கொடுத்தும் இதுவரையும் எதுவித நியாயமும் கிடைக்காத நிலையில் இனவாதம், மதவாதம் இல்லாதவர்கள் நாங்கள் எனக்கூறி தமிழர்களின் இனப்பரம்பலை



தடுக்கும் அல்லது சிதைக்கும் எந்த ஒரு செயலும் இனி இடம்பெறாது எனவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வலியை உணர்ந்தவன் நான் அவர்களுக்கு நீதி பெற்ற தருவேன், அரசியல் கைதிகளை விடுதலை செய்வேன், பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குவேன் என்றெல்லாம்



மேடைகளில் முழங்கிய தற்போதைய ஜனாதிபதியும் அவரது தேசிய மக்கள் சக்தி எனும் NPP அரசும் ஆட்சி பீடமேறி இதுவரை அவர்கள் கொடுத்த எந்த வாக்குறுதிகளையும் இன்னமும் நிறைவேற்றாத நிலையில் வடக்கில் தமிழர் பிரதேசங்களில் சுமார் 5940 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க எடுத்த இரகசிய திட்டம் காணி நிர்ணயச் சட்டத்தின் நான்காம் பிரிவிற்கமைய 28.03.2025 அன்றைய தினம் இலக்கம் 2430 எனும் வர்த்தமானிப் பிரசுரத்தின் அடிப்படையில் இரகசியமாக நகர்த்தப்பட்டது அம்பலமானது.




இதேபோன்று வடக்குக் கிழக்கு தமிழர் தேசத்தில் பல காணி அபகரிப்பு விடயங்களைப் பட்டியலிட முடியும் அதிலும் விசேடமாக இவர்களின் புதிய ஆட்சியில் கடந்த சில மாதங்களில் தமிழர் தேசத் தென் எல்லையில் சைவத் தமிழர்களின் தொன்மையான,புராதன வரலாறு கொண்ட தமிழ்க் கடவுள் முருகனின் ஆலயம் அமைந்து அழகு வன தேசமாகக் காட்சி தரும் உகந்தை ஆலயத்தையண்டிய பிரதேசங்களிலும் திடீரென நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலைகளும் கடற்படை,இராணுவம்,வனஇலாகா மற்றும் ஏனைய சில திணைக்களங்களுமாக அங்கு மேற்கொள்ளும் உரிமை மறுப்புச் செயல்களும் எல்லைக் குழப்பங்களும்,உகந்தை ஆலய காணி

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# வீழ்ச்சிப் போக்கில் உள்ள மலையக சுகாதார நிலை

மருதன் ராம்

சுகாதாரம் என்பது அடிப்படை மனித உரிமையாகும். எனினும் இந்த உரிமை மலையக மக்களுக்கு இலகுவில் கிடைப்பதில்லை. பல உரிமைகளையும் போராடி பெறவேண்டிய நிலையில் உள்ள மலையக மக்களுக்கான சுகாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சி பாதையிலேயே செல்கிறது. காலனித்துவ ஆட்சிக் காலப்பகுதியில் மலையக மக்களின் சுகாதார நிலைமைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சில முன்னேற்றங்கள் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலங்களில் கட்டம் கட்டமாக வீழ்ச்சியடையத் தொடங்கின. 1930களில் இலங்கையின் பெரும்பான்மை மக்களின் பிரதேசங்களை விடவும் ஒப்பீட்டளவில் சிறந்த சுகாதார சேவைகளை உடையவர்களாக பெருந்தோட்ட மக்கள் காணப்பட்டனர். அந்நிலைமை 1970இற்கு பிற்பட்ட காலப்பகுதியில் மாற்றமடைந்தது. அவர்களுக்கான குடியுரிமை மற்றும் வாக்குரிமை என்பவை உறுதி செய்யப்பட்ட பின்னரும், 1972ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்கள் அரச பெருந்தோட்டயாக்கம், மற்றும் ஜனதா எஸ்டேட் அபிவிருத்தி சபை என்பனவற்றின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னரும் பெருந்தோட்ட சுகாதார சேவைகள் அபிவிருத்தி அடையவில்லை.




குறித்த காலப்பகுதியில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்ற அரச பெருந்தோட்டயாக்கம் மற்றும் ஜனதா எஸ்டேட் அபிவிருத்தி சபை ஆகிய நிறுவனங்கள் பெருந்தோட்ட மக்களின் சுகாதார சேவைகளை பகுதியளவில் பொறுப்பேற்றுக் கொண்டன. அதன் தொடர்ச்சியாக அக்காலத்தில் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கிய குடும்ப சுகாதார பணியகம், பெருந்தோட்ட மக்களின் சுகாதார திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் தொடர்பான நடவடிக்கைகளை பொறுப்பேற்று நடாத்தியது. 1990களின் ஆரம்பத்தில் பெருந்தோட்டங்கள் 23 பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழ் கொண்டுவரப்பட்டு தனியார் மயமாக்கப்பட்டதன் விளைவாக அந்த தோட்டங்களின் சுகாதார நலத் தேவைகள் தோட்ட நிர்வாகங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டன. இதன் விளைவாக மீண்டும் பெருந்தோட்ட சுகாதாரத் துறை வீழ்ச்சியை நோக்கி செல்ல ஆரம்பித்தது. பின்னர் அரசின் பங்களிப்புடன் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நிதியத்தை ஸ்தாபித்து பெருந்தோட்ட நிறுவனங்களின் பங்களிப்புடன் பெருந்தோட்ட சுகாதார சேவைகளை வழங்க வழியேற்படுத்தியது. முக்கியமாக இந்த நிதியம் பெருந்தோட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றமையால் பெருந்தோட்ட சுகாதார சேவைகள் இன்னும் முழுமையான வளர்ச்சியடையவில்லை. பெருந்தோட்ட மக்களது குடியுரிமை உறுதிசெய்யப்பட்ட பின்னரும் மூன்றாம் தரப்பான தோட்ட நிறுவனங்களின் பொறுப்பிலேயே தொடர்ந்து இவர்களின் சுகாதாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. எனவே இது ஒரு மனிதவுரிமை மீறலாகவே அவதானிக்கப்பட வேண்டும்.

### தோட்ட வைத்தியசாலை முறைமை



மலையக பிரதேசங்களில் தோட்ட வைத்தியசாலை என்ற சிகிச்சை நிலையங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் தகுதியுடைய ஆளணியினரோ, அடிப்படை வசதிகளோ இல்லை. தோட்ட நிறுவனங்களின் கீழ் சுகாதார முறைமை காணப்படும் பல்வேறு தோட்டங்களிலுள்ள நிலைமை இவ்வாறுதான் இருக்கின்றது. இங்கு பணியிலிருக்கும் ஒரு சிலரும் எவ்வித பயிற்சியோ தகைமைகளோ அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அங்கு வைத்தியர்கள் போன்று செயற்படுபவர்கள் உண்மையில் உரிய கல்வி தகைமைகளை கொண்ட வைத்தியர்கள் இல்லை. அவ்வாறானவர்கள் நுஆமு என்ற தோட்ட மருத்துவ உதவியாளர் என்ற பெயரில் அங்கு பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். அவர்களுக்கான வேதனம் குடியிருப்பு உள்ளிட்ட வசதிகள் பெருந்தோட்ட நிறுவனங்களின் ஊடாகவே வழங்கப்படும். அவர்களுக்கான நியமனம்




பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக வழங்கப்படுகிறது. அரசின் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள சுகாதார திணைக்களத்துக்கும் இந்த தரப்பினருக்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லை. குறித்த தரப்பினர் பெருந்தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மாத்திரம் முதலுதவிகளை வழங்க முடியும். எனினும் அவர்கள் தொழிலாளர்கள் மாத்திரமின்றி பல இடங்களில் வைத்தியர்கள் என்ற பெயரில் மருந்துகளையும் சிகிச்சைகளையும் அளிக்கின்றனர். அவ்வாறானவர்களின் செயற்பாடுகளினால் உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. அதே நேரம் மேலும் சில தோட்டங்களில் அவ்வாறான தோட்ட வைத்தியசாலைகளும் மூடப்பட்டுள்ளன. எனவே சிறியளவிலான நோய்களுக்கு கூட பெருந்தோட்ட மக்கள் நகரங்களை நோக்கியே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். தோட்ட வைத்தியசாலைகளில் உரிய இடம் மற்றும் மருத்துவ வசதிகள் போதியளவில் காணப்படாமை, ஆளணியினரின் பற்றாக்குறை, மேலதிக சிகிச்சை வசதிகள் இல்லாமை, போக்குவரத்துக்கு தோட்ட நிர்வாகங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை, பொருளாதார சிக்கல், நகரங்களுக்கு செல்வதற்கான செலவீனங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை போன்ற காரணிகளை இன்றளவும் தோட்டங்களில் காணமுடியும். அதேபோல் அந்த மக்கள் அரச வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெறுவதாயினும் அதற்காக தமது ஒருநாள் வேலையையும் அதற்கான வேதனத்தையும் இழக்க வேண்டியுள்ளது. இவற்றை கடந்து நகரங்களில் அமைந்துள்ள அரச வைத்தியசாலைகளுக்கு செல்லும் பெருந்தோட்ட மக்கள் அங்கு மொழிப்பிரச்சினையையும் எதிர்நோக்குகின்றனர்.

### அண்மைய போக்கு

பெருந்தோட்ட மக்களின் அன்றாட உணவாக கோதுமை ரொட்டியும், அரிசி சோறுமே பிரதான இடம் வகிக்கின்றது. இது எவ்விதத்திலும் பிள்ளைகளுக்கோ, தாய்மாருக்கோ போதுமான போசாக்கை வழங்கப் போவதில்லை. நாளாந்த உணவு வேளையை போசாக்கு மிக்கதாக அமைத்துக் கொள்ளும் அளவுக்கு அவர்களின் பொருளாதாரம் இல்லை. எனவே பிள்ளைகளின் வளர்ச்சியும், ஆரோக்கியமும் நேரடியாக பாதிக்கின்றது. மறுபுறம் தோட்டங்களில் காணப்படும் ஆரோக்கியமான கீரை வகை, பழங்கள், மரக்கறிகள் போன்றவற்றை அந்த மக்கள் எவ்வாறு உணவு வேளையுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு அவர்களுக்கு அறிவூட்டல் தேவைப்படுகின்றது. சில இடங்களில் அவ்வாறான தெளிவூட்டல் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. எனினும் அவை போதுமானதாக இல்லை.



இந்த பின்னணியில் பெருந்தோட்ட மக்களுக்கு உரிய சுகாதார சேவையை வழங்க வேண்டிய தோட்ட வைத்தியசாலைகளை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற பரவலான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும் இன்றளவும் அந்த பணி உரிய முறையில் இடம்பெறவில்லை. இதற்காக நல்லாட்சி காலப்பகுதியில் பாராளுமன்றில் தனிநபர் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது. எனினும் அந்த பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. மிகக் குறுகிய அளவிலான தோட்ட வைத்தியசாலைகள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# தமிழ்நாட்டில் ஈழ ஏதிலியர் நிலை...?

ஜோஸ்–தமிழ் நாடு

1983 ஆம் ஆண்டு உலகத் தமிழர்களால் மறக்க முடியாத ஓர் ஆண்டாகும். ஈழத்தமிழர்களின் பூர்வீக நிலமான இலங்கைத் தீவில் அம்மக்கள் மீது சிங்கள இனவெறியர்களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனக்கலவரத்தில் ஆயிரக்கணக்கான ஈழத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.



அப்போது கொழும்பிலிருந்தும் இன்னபிற பகுதிகளிலிருந்தும் கப்பல் மூலமாக பலர் இந்திய அரசால் தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். 1983 கலவரத்திற்குப் பிறகும் ஈழத் தமிழ் மக்கள் பலர் போர் காரணமாக தமிழ்நாட்டில் தஞ்ச மடைந்தனர்.

### அல்லல்படும் ஈழ ஏதிலியர்

தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களை குற்றப் பரம்பரையினரைப் போலத் தான் இந்திய அரசு நடத்துகிறது. அவர்களைத் தனி முகாம்களில் தான் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வரம்புக்குட்பட்ட நிலையில் தான் வெளியில் நடமாட முடியும். வேலைக்குச் செல்வோரும், கல்வி கற்க செல்வோரும் மாலைக்குள் முகாம் திரும்பிவிட வேண்டும் என்பது விதி. தமிழ்நாட்டு அரசின் வருவாய் துறை அதிகாரிகள், க்யூ பிரிவு காவல் துறையினரின் கண்காணிப்புகளும், கெடுபிடிகளும் இந்த முகாம்களில் அதிகம்.



இந்த முகாம்கள் என்பது முறையான கட்டட வசதிகள் கொண்ட முகாம் அல்ல. தகரங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கூடாரங்களில் தான் இம்மக்கள் வசித்து வருகின்றனர். 2009ஆம் ஆண்டு வரை பல முகாம்களில் கழிப்பறைகள், குளியல் அறைகள் கூட இல்லை. தற்போது தான் தமிழ்நாடு அரசு இவர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரப் போவதாக அறிவித்துள்ளது.

### சிறப்பு முகாம்

ஈழத் தமிழர்களில் விடுதலைப் புலிகள் என சந்தேகப்படுபவர்களையும் இன்ன பிற போராளி அமைப்புகளைச் சார்ந்தவர்களையும் அடைத்து வைப்பதற்கென பூந்தமல்லி, செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு அரசு சிறப்பு முகாம்களை நடத்தி வந்தது. இந்த சிறப்பு முகாம்கள் என்பது சித்திரவதை முகாம்களாகத் தான் செயல்பட்டு வந்தது. இந்த கொடூர முகாம்கள் குறித்து ஈழப் போராளி அமைப்பான தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த தோழர் பாலன் 'சிறப்பு முகாம் எனும் சித்ரவதை முகாம்' என்கிற நூலை எழுதியுள்ளார். இவர் ஏழு ஆண்டுகள் இந்த சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





தற்போது பூந்தமல்லி, செங்கல்பட்டு சிறப்பு முகாம்கள் கலைக்கப்பட்டு, திருச்சியில் அதே சிறப்பு முகாம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### இந்திய அதிகாரத்தின் திமிர் போக்கு

அண்மையில் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர் ஒருவர் தாம் தமிழ்நாட்டில் தங்கியிருக்க விரும்புவதாக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்ற குற்றச்சாட்டில் தண்டனை பெற்று திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தார். இவர் இலங்கை திரும்பினால் சிறீலங்கா அரசால் தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக கூறி தொடர்ந்து தமிழ்நாட்டில் குடியிருக்க அனுமதி வேண்டினார். ஆனால் இந்திய அதிகார வர்க்கத்தின் அங்கமான உச்சநீதிமன்றம் அவரது மனுவை நிராகரித்துள்ளது. மேலும் வெளிநாட்டவர்கள் வந்து தங்க இது ஒன்றும் தர்ம சத்திரம் இல்லை எனக் கூறியுள்ளது. இங்கு தங்குவதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கிறது என கேட்டுள்ளனர் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.





அவர் தமிழ்நாட்டில் தங்க தமிழர் என்கிற தகுதியே காரணம் என அந்நீதிபதிகளிடம், மனுதாரரின் வழக்குரைஞர் கூறியிருக்க வேண்டும். தமிழ்நாட்டு குடிமக்கள் அல்லாத சுமார் 70லட்சத்திற்கும் மேற்பட்டோர் தமிழ்நாட்டிற்கு வந்து தங்கி வேலை பார்க்கின்றனர். ஆனால் ஒரு ஈழத்தமிழர் இங்கு தங்குவதை குறையாக சுட்டிக்காட்டுகிறது உச்சநீதிமன்றம்.



தமிழ்நாடு அருகே கர்நாடக எல்லைக் குட்பட்ட பகுதியில் திபெத் ஏதிலியர்களுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்து தங்க வைத்துள்ளது இந்திய அரசு. தனது வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்ப இவ்வாறான வசதிகளை ஏற்படுத்தி தந்துள்ளது. ஆனால் ஈழத் தமிழர்கள் மீதான இந்திய அரசின் கொள்கை என்பது பகைக் கொள்கை தான். அது என்றும் மாறாது. ஆனால் இன்னும் ஈழத் தமிழர் சிலர் இந்தியா ஈழம் வாங்கித் தரும் என்று ஏமாறுகின்றனர் அல்லது அவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர்.

### வதிவிட உரிமை

தமிழ்நாட்டு அரசு ஈழ ஏதிலியர்களுக்கு காலவரம் பற்ற தற்காலிக வசிப்பிட நிலையை (Temproary Resident Status) இந்திய அரசிடம் வலியுறுத்தி பெற்றுத்தர வேண்டும். இது வாக்களிக்கும் உரிமையை தவிர்த்து கல்வி, மருத்துவம், தனியார் வேலைவாய்ப்பு, தமிழ்நாடு அரசின் சலுகைகள் ஆகியவற்றை அவர்கள் பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில் உருவாக்க வேண்டும்.

• • •

## கிளீன் சிறிலங்கா ... தொடர்ச்சி ...

முடிகின்றது.

இந்த ஆண்டு (2025) ஜனவரி மாதத்தில் மாத்திரம் 43 காட்டுயானைகளும், மூன்று மனிதர்கள் உயிரிழந்துள்ளதாகவும் அந்தத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

கடந்த காலத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் இந்த காட்டு யானைகள்- மனித மோதல்கள் மற்றும் உயிரிழப்புகளை கருத்தில் கொண்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் FactSeeker இனால் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்திடம், தகவல் அறியும் சட்டத்தை பயன்படுத்தி எழுத்து மூலம் தகவல் கோரப்பட்டது.

இந்த காலகட்டத்தில் அதிகமான மனித உயிரிழப்புகள் அநுராதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

இதன்போது 185 பேர் அநுராதபுரம் மாவட்டத்தில் உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதேபோல் கடந்த ஆறு ஆண்டுகளில் அதிகமான காட்டுயானைகளின் உயிரிழப்புகள் 2023ஆம் ஆண்டு பதிவாகியுள்ளன. அவ்வாண்டு 488 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

வனப்பகுதி அடிப்படையில் கணக்கெடுப்பை முன்னெடுத்துள்ள நிலையில், கடந்த ஆறு ஆண்டுகளில் அதிகமான காட்டு யானை உயிரிழப்புகள் பொலன்னறுவை வனப்பகுதிகளில் பதிவாகியுள்ளன.

அப்பகுதிகளில் 487 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

இவ்வாறு கொல்லப்பட்டுள்ள காட்டு யானைகள் முக்கியமாக, துப்பாக்கிச் சூடு, மின்சாரக் கம்பி தாக்குதல் மற்றும் பட்டாஸ் மூலமான தாக்குதல் போன்ற காரணங்களால் நடந்துள்ளன.

2019 முதல் 2024 வரையிலான ஆறு ஆண்டுகளில், துப்பாக்கிச் சூட்டால் 409 யானைகளும், பட்டாஸ் தாக்குதல் மூலம் 356 யானைகளும், மின்சார கம்பி தாக்குதலில் 316 யானைகளும் உயிரிழந்துள்ளன.

மேலும், அதிகமான சொத்து சேதங்களும் பொலன்னறுவை மாவட்டத்திலேயே இடம் பெற்றுள்ளன.

2024ஆம் ஆண்டில் மாத்திரம் மனித-யானை மோதலால் 3,756 பேர் சொத்து சேதங்களை சந்தித்துள்ளனர். இது கடந்த ஆறு ஆண்டுகளில் பதிவாகியுள்ள மிக அதிகமான சொத்து சேதங்களாகும்.

இயற்கையின் அழகை மனிதன் ரசிப்பதற்கு மாத்திரமல்ல உயிர் வாழ்வதற்கும் தான் என்ற நிலையில் எனவே சூழல் பாதுக்காக்கப்பட வேண்டும். சுற்றாடல் துறை அமைச்சு உருவாக்கப்பட்டாலும் சூழல் மாசடைதலை தடுக்க பல திட்டங்களை கொண்டு வந்தாலும் அது தோல்வி கண்டுள்ளது. கொழும்பு நகர் அதிக சனத்தொகை கொண்டதாக காணப்பட்டாலும் அங்கு வீதிகளில் பல துப்புரவு தொழிலாளர்கள் சேவையில் ஈடுபட்டாலும் பல இடங்கள் பல வழிகளில் மாசடைகின்றது. புகை மூலம், ஒலி ஒளி மூலம், தூசி துணிக்கைகள், நீர் உள்ளிட்ட பல வழி வகைகளில் மாசடைதல் ஏற்படுகிறது. ஆனாலும் தற்போதைய அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முறையான திட்டம் ஒன்றை கொண்டு வந்துள்ளதாகவும் இது கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் என்பதாக அவர்கள் கூறினாலும் முறையாக சூழல் மாசடைதலை தடுக்க முடியவில்லை .

எனவே தான் சூழலை சுத்தமாக்க ஒவ்வொருவரது வீட்டில் இருந்து உருவாக்க நாம் அனைவரும் வழியமைப்போமாக.

• • •

## கல்மடுக்குளத்தை ... தொடர்ச்சி ...

காணிகளை பகிர்ந்தளிக்கமுடியாது எனக்கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. என்றார்.

இந்நிலையில் வனவளத்திணைக்கள அதிகாரி இதன்போது பதிலளிக்கையில், கல்மடுக்குளமெனவனவளத் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளபிரதேசம் நடுக்காட்டிற்குள், ஐந்துகிலோ மீற்றர் தூரத்திலேயே குறித்த குளம் காணப்படுகின்றது. அந்தவகையில் அக்குளம் நடுக்காட்டிற்குள் காணப் படுவதால், அது வனமாக பாதுகாக்கப்படுவதால் அதனை விடுவித்துக் கொடுக்கமுடியாதநிலை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இதன்போது வனவளத்திணைக்கள அதிகாரியின் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த ரவிகரன், கடந்தகால அசாதாரண சூழ்நிலைகாரணமாக குறித்த பகுதியில் குடியிருந்த, விவசாய நடவடிக் கைகளில் ஈடுபட்ட தமிழ் மக்கள் குறித்த பகுதி களிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடப்பெயர்வைச் சந்தித்த மக்கள் அவர்களுடைய பகுதிகளில் மீளக் குடியமர்த்தப் படாதநிலை காணப்படுகின்றது. அத்தோடு அவர்கள் விவசாய நடவடிக்கைக்காகப் பயன்படுத்திய குளங்களும், குளங்களுக்குக் கீழான வயல்நிலங்களும் விடுவிக்கப்படாத நிலையிலும் காணப்படுகின்றன.

இந்நிலையில் மக்கள் குடியிருந்த மற்றும், விவசாய நடவடிக்கைக்குப் பயன் படுத்திய நிலங்கள் பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு மக்கள் விவசாயத்திற்காக பயன்படுத்திய குளமும், வயற்காணிகளும் நீண்டகாலமாக பயன்படுத்தாத நிலையில் பற்றைக்காடுகளாக காணப்படும்போது, குறித்த பகுதியை வனப்பகுதி எனக் கூறிக்கொண்டு வனவளத் திணைக்களம் விடுவிப்புச் செய்யாமல் தொடர்ச்சியாக ஆக்கிரமித்து வைத்திருப்பது நியாயமற்ற செயல்பாடு என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், குறித்த கல்மடுக்குளம் என்ற பகுதியில் மக்களால் முன்பு விவசாயம் செய்யப்பட்டமையினால்தால் தற்போதும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் குறித்த குளம் தொடர்பான பதிவுகள் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

எனவே குறித்த காணிகளை அரசாங்கம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத் தெரிவித்தார். அதைவிடுத்து இவ்வாறாக திணைக்களங்கள் மக்களின் காணிகளை தொடர்ந்தும் அபகரிப்புச் செய்துவைத்திருந்தால் மக்கள் எங்கே செல்வார்கள் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

கடந்த காலங்களில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சிஎன பாரிய அளவில் மக்களால் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு, நெல் வடக்கிலிருந்து தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்த வரலாறுகளே காணப்பட்டன. இவ்வாறு மக்களால் நெற்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட பெருமளவான காணிகளை அரச திணைக்களங்கள் ஆக்கிரமித்துள்ள நிலையே காணப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்தார்.

அத்தோடு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும்,பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க இந்த விடயத்தில் கூடுதல் கவனமெடுக்க வேண்டுமென வலியுறுத்திய ரவிகரன், அரசதிணைக்களங்களால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் குடியிருப்பு மற்றும், விவசாயக்காணிகளை விடுவிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் கோரிக்கை முன்வைத்தார்.

அதேவேளை கல்மடுக்குளத்தின்கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் தரவுகளையும், அங்கு ஏற்கனவே மக்கள் பயிற்ச்செய்கை மேற்கொண்டமைக்கான ஆதாரங்களையும் வவுனியா வடக்கு பிரதேச செயலரிடம் சமர்ப்பிக்குமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தரிடம் ரவிகரன் இதன்போது வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய விமான .. . தொடர்ச்சி ...

தயாரிப்பான போயிங்-787 ரக விமானம் குஜராத்தின் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் தரையில் வீழந்து வெடித்துள்ளது.

விமானத்தில் 169 இந்தியர்களும், 53 பிரித்தானியர்க ளும், ஒரு கனேடியரும், 7 போத்துக்கல் நாட்டவர்களும் பயணம் செய்து ள்ளனர். அவர்களில் பிரித்தானியாவைச் சேர்ந்த 40 வயதான இளைஞர் ஒருவர் மட்டும் விமானம் கட்டிடத்தில் மோதுவதற்கு முன்னர் அதில் இருந்து குதித்ததால் உயிர் தப்பியுள்ளார்.

இந்த விமானத்தில் பயணம் செய்த குஜராத் மாநிலத்தின் முன்னாள் முதல்வரும் பஞ்சாப் மானிலத்தின் தற்போதைய பாரதிய ஜனதா கட்சியின் தலைவரும் கொல்லப்பட்டுள்ளார். விமான விபத்திற்கான காரணம் இதுவரையில் அறியப்படவில்லை. இந்திய விமானங்களுக்கு தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதல் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்த நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

2011 ஆம் ஆண்டு பயன்பாட்டுக்கு வந்த இந்த விமானம் சந்தித்த முதலாவது விபத்து இது என தெரிவிக்கப்படுகின்றது. விபத்திற்கான காரணத்தை கண்டறியும் விசாரணைகளுக்கு உதவும் பொருட்டு அமெரிக்க மற்றும் பிரித்தானிய அதிகாரிகள் இந்தியாவுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

## வீழ்ச்சி போக்கில். .. தொடர்ச்சி ...

அரசினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் ஏனைய அரச வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் இவ்வாறான வைத்தியசாலைகளின் தரம் குறைந்த அளவிலேயே உள்ளன. குறிப்பாக சில இடங்களில் மாதாந்தம் இடம்பெறும் கிளினிக் என்ற பரிசோதனை நடவடிக்கைகளுக்காக மாத்திரம் தோட்ட வைத்தியசாலைகள் அரச வைத்தியசாலைகள் என்ற பெயரில் இயங்குகின்றன. இன்னும் சில இடங்களில் அரச வைத்தியர்கள் அவ்வாறான தோட்ட வைத்தியசாலைகளுக்கு சென்று மருந்துகளை வழங்குவதனை தோட்ட மருத்துவ உதவியாளர்கள் விரும்புவதில்லை என்ற குற்றச்சாட்டும் உண்டு.

அடிப்படை உரிமையான சுகாதாரத்தை பெருந்தோட்ட மக்களுக்கு முறையான வகையில் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு உரிய தரப்பினருக்கு உள்ளது. தேசிய சுகாதார அமைச்சிற்கு மேலதிகமாக ஒன்பது மாகாணங்களுக்கும் பிரத்தியேக சுகாதார செயலாளர்களும், ஆயுர்வேத மருத்துவ விநியோகத்துக்கு பொறுப்பான திணைக்களமும் உள்ளன. சுகாதார சேவைகளை வழங்கும் செயற்பாடுகளில் காலத்துக்குக் காலம் அரச முதலீடுகளில் அதிகரிப்பு காணப்படுகின்ற போதிலும் தொடர்ந்து பல்வேறு சவால்களையும் சந்திக்க வேண்டியுள்ளது. பெருந்தோட்ட சுகாதார கட்டமைப்பை சீரமைக்க வேண்டியதும், அதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதும் மலையகத்துக்கான அவசர தேவைகளாகும். இது மலையக மக்களின் அரசியல் பிரதிநிதிகளின் கடமையாகும். குறிப்பாக தேர்தல் கால வாக்குறுதிகளில் இவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்படுவதில்லை. மாறாக சில சலுகைகளையே அரசியல்வாதிகள் முன்வைத்து வாக்கு கோருகின்றனர். இந்த விடயத்தில் தொடர்ச்சியான அலட்சிய போக்கு பின்பற்றப்படுகிறது. பல தோட்டங்களில் நோயாளர்கள் தங்கி சிகிச்சை அளிக்க கூடிய வகையிலான வைத்தியசாலைகள் காணப்பட்ட போதிலும் அவை தற்போது கவனிப்பாரின்றி உள்ளன. இலங்கையில் காணப்படும் தேசிய வைத்தியசாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏனைய வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. எனினும் பெருந்தோட்ட மக்களுக்கான சுகாதார சேவையை வினைத்திறனாக்குவதற்கு வாய்ப்பாக உள்ள தோட்ட வைத்தியசாலைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இதில் இலங்கை அரசு, பெருந்தோட்ட நிறுவனங்களுடன் ஏற்படுத்தி கொண்டு குத்தகை ஒப்பந்தமும் ஒரு விதத்தில் தாக்கம் செலுத்துகிறது. எனவே, முறையான சுகாதாரத்தை சகலருக்கும் கொண்டு செல்ல வேண்டியது அரசின் கடமையாகும்.

• • •

## உலகின் இரண்டா ... தொடர்ச்சி ...

கையிருப்பு 36,000 தொன்களாகும்.

இது 1965 ஆம் ஆண்டு நிலையை எட்டியுள்ளது. அமெரிக்க டொலருக்கு அடுத்த நிலையில் இருந்து ஈரோ நாணயத்தின் பின்னிருக்கை நிலையை தங்கம் பின்தள்ளி தற்போது இரண்டாவது நிலையை எட்டியுள்ளது. உலகின் பின்னிருக்கை நாணயமாக 57 வீதம் டொலரே உள்ளது. அதற்கு அடுத்த நிலையில் 20 வீதமாக தங்கமும், 16 வீதமாக ஈரோ நாணயமும் உள்ளன. தங்கத்தின் விலை கடந்த வருடம் 30 விகிதம் உயர்ந்திருந்தது. அது தற்போது 28 கிறாம் தங்கத்தின் விலை 3500 டொலர்களாக உள்ளது. எனினும் உலகில் இரண்டாவதாக அதிகம் பயன்படுத்தும் நாணயமாக ஈரோ உள்ளதாக மத்தியவங்கி தெரிவித்துள்ளது. உக்ரைன்-ரஸ்ய மோதல்கள், அமெரிக்க - சீனா பொருளாதார மோதல் மற்றும் இஸ்ரேல் பாலஸ்தீன போர் என்பன தங்கத்தின் மீது பல நாடுகள் முதலீடுகள் மேற்கொள்வதை ஊக்கப்படுத்தியுள்ளன.

## சந்திப்பு வருவது. .. தொடர்ச்சி ...

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியை பெற போதிய ஆசனங்கள் இல்லை எனில் கௌரவமாக எதிர்க்கட்சியாக சபைகளில் இருப்பதில் எந்த தவறும் இல்லை. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசை பொறுத்தவரை ஏற்கனவே தேர்தல் காலத்தில் அவர்கள் கூறிய ஊழல் ஒழிப்புகளோ, பொருளாதார மீட்சிகளோ, இதுவரை எதிர்பார்த்தவை ஆறு மாதங்களை எட்டும் போதும் கிடைக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியும் முழுமையாக ஒதுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் உள்ளூராட்சி சபைகளில் எதிர்பார்த்த அபிவிருத்திகளை பெறலாம் என்பது சந்தேகமானதாகவே உள்ளது.

தமிழ்த்தேசிய கட்சிகள் ஆசனங்களை கூடுதலாக பெற்ற சபைகள் அந்த வட்டார உறுப்பினர்கள் ஊடாக தமிழ்தேசிய அரசியலை முன்கொண்டு செல்லவும், இளைஞர் யுவதிகளுக்கு விழிப்பூட்டி சமூக ஒழுக்கமான செயற்பாடுகளை முன்எடுப்பதே இன்றைய தேவை.

அதனை விட்டு கதிரைகளுக்காக சேராத இடம் சேர்ந்து தமிழ்த்தேசிய அரசியலை திசை மாற்றுவது எதிர்காலத்தில் இன்னும் பல பாதிப்புக்களை எதிர்கொள்ளவைக்கும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.




## ஒரு இனத்தை... தொடர்ச்சி ...

1932-1933இல் உக்ரைனில் சோவியத் ஒன்றியம் ஏற்படுத்திய செயற்கைப் பஞ்சம், 1975-ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு இனப்படுகொலைகளாக முன் வைக்கின்றனர். அமெரிக்க செவ்விந்தியர்கள், பாலஸ்தீனியர்கள், கொங்கோ, சோமாலியா, கொசாவா, ஸ்ரீலங்கா என உலகநாடுகளின் வரலாற்றில் இனப்படுகொலைகள் தொடர்ந்தும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் 2009 ஆம் ஆண்டில் மட்டும் ஈழத்தில் சுமார் 145,000 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டதாக வன்னியில் இருந்தும் வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. ஈழத்தின் இறுதி யுத்தத்தின் பொழுதும்; ஸ்ரீலங்கா அரசாங்கம் வன்னியில் இருந்த 3 இலட்சம் மக்களுக்கும் உணவுப் பொருட்களையோ அல்லது தண்ணீரையே அனுப்பாது தடைசெய்து குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பட்டினியாலும், பயங்கர இரசாயன ஆயுதங்களினாலும் தாக்கி சுமார் ஒன்றரை இலட்சம் வரையான மக்களைக் கொலை செய்தது இந்நிலையில் இலங்கையில் இனப் படுகொலை இடம்பெறவில்லை என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைப்பதுபோல் பொய்யுரைக்கும் அரசாங்கமும்,சிங்க பேரினவாதிகளும் இவைபோன்ற படுகொலைகளும், பட்டினிப்படுகொலைகளும் ஈழத்தில் இடம் பெறவில்லையா என்பதை உறுதிப்படுத்துவார்களா..? அப்படியானால் அடுத்த இலக்கில் சந்திப்போம்.....!

• • •

## வடக்கு கடற்கரை ... தொடர்ச்சி ...

கடல்வாழ் உயிரினங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்ப தால், இந்த நிலைமை குறித்து உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நாரா நிறுவன அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த பிளாஸ்ரிக் துகள்கள் வந்த வழி, அவற்றின் தாக்கம் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒரு விஞ்ஞான ரீதியான அறிக்கை ஒன்றின் அவசியத்தையும் கடற்றொழில் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் மன்னாரிலும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அனைத்துலக ... தொடர்ச்சி ...

விறாந்தை பிறப்பித்திருந்தது.

அமெரிக்காவினால் தடை விதிக்கப்பட்ட நான்கு நீதிபதிகளில் இருவர் முன்னர் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டவர்கள். அவர்கள் மீது அமெரிக்கா முன்னரும் அழுத்தங்களை பிரயோகித்திருந்தது. அமெரிக்காவின் அழுத்தங்கள் காரணமாக 2021 ஆம் ஆண்டு அந்த வழக்கு கைவிடப்பட்டிருந்தது. அனைத்துலக குற்றவியல் நீதமன்றத்தின் தலைவர் கரீம் கான் மீதும் அமெரிக்கா கடந்த பெப்ரவரி மாதம் தடை விதித்திருந்தது. இதனிடையே இஸ்ரேலின் மீது நடவடிக்கை எடுத்தால் அனைத்துலக நீதிமன்றத்தில் இருந்து பிரித்தானியா விலகும் என பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரோன் அனைத்துலக நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி கானை எச்சரித்ததாக பிரித்தானியாவின் நாளேடு ஒன்று தெரிவித்துள்ளது.

## தாயகத்தில் நடை.  .. தொடர்ச்சி ...

அவருக்கு இருந்தது.

3: கஜேந்திரகுமார் தன்னுடைய காலத்திலாவது தமிழ் தேசிய அரசியலுக்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டும் என்பதே அவரது விருப்பம்.

இது எல்லாம் சேர்ந்துதான் அவர்கள் இந்த ஒப்பந்தத்துக்கு வந்திருக்கின்றார்கள். இந்த இரண்டுதரப்புக்கும்இடையிலே உருவாக்கப்பட்ட இந்த ஐக்கிய முன்னணி வரவேற்கத்தக்க ஒன்று. தற்போதய சூழலில் மிகவும் அவசியமான ஒன்று. ஆனால் எல்லாரும் கேட்கின்ற கேள்வி இந்த ஐக்கிய முன்னணி நீடிக்குமா என்றுதான்.

தமிழ் தேசிய கட்சிகளைப் பொறுத்தவரையில் மூன்று தரப்புகள் முன்னணியில் இருக்கின்றது. அதில் முதலாவது நிலையில் இருப்பது தமிழரசு கட்சி, இரண்டாவது நிலையில் இருப்பது தமிழ் தேசிய பேரவை. மூன்றாவது நிலையில் இருப்பது ஜனநாயக தமிழ் தேசிய கட்சி.

இந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் வடக்கு கிழக்கில் இரண்டாவது நிலையில் ஜனநாயக தமிழ் தேசியக் கட்சி இருந்தாலும் கூட மக்களினுடைய அபிப்பிராயம் ஆதரவு என்ற அடிப்படையில் பார்க்கிற போது இரண்டாவது நிலையில் தமிழ் தேசிய பேரவைதான் இருக்கக்கூடியதான சூழல் இருக்கிறது என்று நான் நினைக்கின்றேன்.

எனவே எப்பவும் ஒரு அரசியல் முன்னுக்கு வர வேண்டும் என்றால், அந்த முதல் நிலையில் இருக்கும் இரண்டு தரப்பில் ஏதாவது ஒன்று ஒழுங்கை எடுத்தால்தான் தான் அந்த அரசியல் இன்னும் முன்னுக்கு செல்லும் அரசியல் சூழல் ஒன்று உருவாகும்.

கடந்த காலத்தில் இந்த இரண்டு தரப்புமே முன்னிலைக்கு வராத காரணத்தில், எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்ததைத்தான் நாங்கள் வரலாற்றில் பாக்கின்றோம்.

வரலாற்றில் முதலாவது தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. அந்த தமிழ் மக்கள் பேரவையின் ஆரம்ப காலங்களில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இருந்தாலும் கூட பின்னர் அதனை விட்டு விலகியமையினால் தமிழ் மக்கள் பேரவை பலம் இழந்த நிலைக்குச் சென்றது.

அதற்கு பின்னர் ஜனாதிபதி தேர்தலை ஒட்டி பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அதற்குத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு வழங்கவில்லை. இதனாலே அந்த முயற்சியும் பெரிய அளவில் வெற்றி பெறவில்லை. ஆனால் இன்றைக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஒரு தமிழ் தேசிய பேரவை என்கின்ற ஒரு அமைப்பை உருவாக்கி அதை ஒரு அரசியல் இயக்கமாக வளர்த்திருக்கின்ற ஒரு செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றமை இந்த ஐக்கிய முன்னணி நீடிக்கும் என்ற நம்பிக்கையை எங்களுக்கு தருகிறது என்று நான் நினைக்கின்றேன். ஆனால் இந்த ஐக்கிய முன்னணி ஒரு பூரணமான ஐக்கிய முன்னணியா? பூரணமான கூட்டணியா? என்ற கேள்வியை கேட்டால் அதற்கு நாங்கள் இல்லை என்றுதான் பதில் கூற வேண்டி இருக்கும்.

• • •

## பூகோளச்...  தொடர்ச்சி ...

சேரும் வரை அதனை மூலதனமாக கருத முடியாது. 2028ஆம் ஆண்டு தொடக்கம் தான் கடன்களை மீளச் செலுத்த ஆரம்பிக்கப் போகிறது இலங்கை. அவ்வாறான நிலையில் 7பில்லியன் இழப்பு எவ்வாறு ஏற்பட்டது என்ற கேள்வி இருக்கின்றது. அப்படிப்பார்க்கையில் சீனா கந்துவட்டிக்காரர்கள் போன்று தான் கடன்களை வழங்கியிருக்கின்றது. அதுமட்டுமல்ல இந்தியா வழங்கிய 4பில்லியன் டொலர்களை விடவும் தமது இழப்பு மட்டுமே அதிகமானது என்பதையும் சொல்லாமல் சொல்லியிருந்தார் சீனத்தூதுவர்.

கடன்மறுசீரமைப்பு மற்றும் இழப்பீட்டுத் தொகை விவகாரம் இப்படியிருக்கையில் கூடவே உடன்பட்ட விடயங்களை தாமதப் படுத்தும் செயற்பாடுகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் சீனா தற்போதைக்கு எவ்விதமான முதலீட்டுத்திட்டங்களையும் முன்னெடுப்பதில்லை என்று தீர்மானித்திருக்கின்றது.

அதேபோன்று ஏலவே ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களையும் வேகமாக முன்னகர்த்துவதை தவிர்ப்பது என்றும்தீர்மானித்திருக்கின்றது. மாறாக, உடன்பாடுகள் தாமதப்படுத்தப்படுவதற்கான காரணங்களை கண்டறியும் அதற்குரிய நடவடிக்கைளை முன்னெடுக்கவுமே வர்த்தக அமைச்சர் வங் வென்டாவோ தலைமையிலான குழுவினர் நேரடியாகவே இலங்கைக்கு வருகை தந்தனர்.

இந்த விஜயத்தின்போது, கொழும்பு துறைமுகநகரத்தில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்துக்கு நிகரான மண்டபமொன்றை அமைப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளதோடு பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்புக்கான இலங்கை - சீன ஒருங்கிணைப்புக்குழுவின் 8ஆவது கூட்டம் நடத்தப்பட்டு அதில் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தல், சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்தல், தொழில்நுட்ப கூட்டிணைவை ஊக்குவித்தல் என்பன தொடர்பில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும். கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இதனைவிடவும், இந்தியா, ரஷ்யா கூட்டில் மத்தளவிமான நிலையத்தினை நிருவகிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மத்தளவிலிருந்து நேரடியாக சீனாவுக்கு சீன ஏயார் லைன்ஸுக்கு சொந்தமான விமான சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பிலும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கு அப்பால், ஏற்படுத்தப்பட்ட உடன்பாடுகளை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி ஆகியோரிடத்தில் வர்த்தக அமைச்சர் வங் வென்டாவோ நேரடியாகவும் பகிரங்கமாகவும் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் தாமதங்களுக்கான காரணங்களை அறிக்கையிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேநேரம், வர்த்தக அமைச்சர் வங் வென்டாவோவின் இலங்கை விஜயத்துக்கு சமாந்தரமாகஅமைச்சர்பிமல்ரத்நாயக்கநேரடியாக ஹொங்ஹொங்குக்கு அழைக்கப்பட்டுள்ளார். இந்த விஜயம் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவற்காக என்று கூறப்பட்டாலும் அந்த விஜயம் குறித்தோ அங்கு நடைபெற்ற சந்திப்புக்கள் குறித்தே இன்றளவில் மூச்சும் விடவில்லை.

சீனா கடன்மீளச் செலுத்தல் ஆரம்பிப்பதற்கு முன்னதாக, தன்னுடன் உடன்பட்ட விடயங்களை முன்னகர்த்தவும், நிலுவையில் உள்ள திட்டங்கள் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளை நகர்த்துவதிலும் தான் அதீதமான நாட்டத்தினைக் கொண்டிருக்கின்றது. இதில் எட்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ள ‘சீன-இலங்கை சுதந்திரவர்த்தக ஒப்பந்தத்தை’ நடைமுறைப்படுத்தவதையும் சீனா இலக்காக கொண்டிருக்கின்றது. தற்போது ஒருவருடத்துக்கு ஒத்திகை நடவடிக்கையாக சுதந்திர வர்த்தக உடன்பாட்டை நடைமுறைப்படுத்துமாறும் கோரி நிற்கின்றது.

இதற்குள் வெகுவிரைவில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக, அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினையும் ஸ்தாபிப்பதற்கு சீனா பிரயத்தனம் காண்பிக்கிறது. இந்த நகர்வின் மூலமாக தெற்காசிய நாடுகளின் எரிபொருள் தேவையை நிவர்த்தி செய்வதோடு அதன் ஊடாக அரசுகளை கட்டுப்படுத்த முடியும் என்று கருதுகிறது சீனா.

அதுமட்டுமன்றி, குறித்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக இரண்டு இலட்சம் பீப்பாய்க்களை நாளொன்றுக்கு உற்பத்தி செய்யும் திறனை கொண்டிருக்கும் சீனா அதனூடாக சர்வதேச வர்த்தகத்தையும் விரிவுபடுத்தவே முனை கிறது.

ஆக, சீனா தனது ‘மண்டலம் மற்றும் பாதை’ முன்முயற்சியின் பங்காளரான இலங்கையை மையப்படுத்திய சர்வதேச வர்த்தக திட்டத்தினை திடமாக தீட்டியிருப்பதால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்சியில் இருக்கும் எவருக்கும் விட்டுக்கொடுப்புக்களை செய்தாலும் தனது ‘பிடியில்’ உறுதியாக இருக்கும்.

இறுதியாக ஐரோப்பிய நாடுகளின் நகர்வுகளையும், ஏனைய ‘பதிலாள்’ பங்குதாரர்களின் கோலோச்சல்களையும் அடுத்த இறுதி அங்கத்தில் பார்க்கலாம்.

**தொடரும்**

## ‘காணிகள்’ வர்த்த  ... தொடர்ச்சி ...

இருப்பு உறுதி செய்யப்படும்.

ஆகவே, வர்த்தமானி விடயத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் சரி, சிவில் அமைப்புக்களும் சரி, தமிழ் மக்களும் சரி, நெகிழ்ச்சித் தன்மையை காண்பிக்கவே முடியாது. அநுர அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில் வர்த்தமானியை மீளப்பெறுவதில் எள்ளளவும் ஆர்வமில்லை.

விசேடமாக, அரச அதிகாரிகளுக்கு இந்த வர்த்தமானியை மீளப்பெறுவதில் சிறிதளவேனும் உடன்பாடில்லை. பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையிலான அரசாங்க குழுவினருக்கும் வடக்கு,கிழக்கு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு அதற்கொரு சான்றாதாரம்.

அதன் பின்னர் பிரதமருடன் நடைபெற்ற கலந்துரையாடலை அடிப்படையாக வைத்து வர்த்தமானியை மீளப்பெறுவதற்கான சட்ட ஆலோசனையை காணி அமைச்சின் செயலாளர், சட்ட மா அதிபரிடம் கோரியிருக்கின்றார்.

அரசியல் ரீதியாக தீர்மானம் எடுக்கப்பட்டால் வர்த்தமானியை மீளப்பெறுவதொன்றும் பெரிய விடயமல்ல. அதற்கு சட்ட மா அதிபரின் ஆலோசனையை பெறவேண்டிய அவசியமும் இல்லை.

இங்கே சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற முனைவதன் நோக்கம் ஒன்று காலத்தைக் கடத்துவது, இரண்டாவது வர்த்தமானி அறிவித்தல் சட்டவிதிகளுக்கு உட்பட்டது என்பதை சட்ட மா அதிபர் ஊடாக வெளிப்படுத்தி மீளப்பெறுவதை தவிர்ப்பது.

அரசாங்கத்தின் குறித்த எளிய நகர்வினைக் கூடக் கணிக்க முடியாத அளவுக்கு தமிழ் மக்களின் சட்டம் தெரிந்த தலைவர்களான சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் ஏட்டிக்குப்போட்டியாக வர்த்தமானி மீளப்பெறப்பட்டுவிட்டது என்ற தொனி யில் அதற்கு தாமே காரணம் என்றுரைத்து ஊடக சந்திப்புக்களை நடத்தி உரிமைகோரவே விளைந் திருக்கின்றார்கள்.

வெளியாகியிருக்கின்ற வர்த்தமானி நடைமுறைக்கு வருவதற்கு இன்றிலிருந்து இன்னும் 14 நாட்கள் (28--06--2025) தான் இருக்கின்றன. இந்த விடயம் சட்ட ரீதியாக அல்ல, அரசியல் ரீதியாக, தமிழ்த் தேசமாக ஒருங்கிணைந்து அணுகப்பட வேண்டியது. தவறினால் தலையெழுத்தே மாறிவிடும், தமிழ் மக்களினது மட்டுமல்ல... அரசியல், சிவில் தலைவர்களினதும் கூட.

**முற்றும்.**

**தமிழர் தேச . . .           தொடர்ச்சி . . .**

விடயங்களிலும் மற்றும் ஏனைய விடயங்களிலும் கொண்டு வரப்படும் புது விதி முறைகளும், நடவடிக்கைகளும், தொடரும் நிலையும் பேசுபொருளாகக் காணப்படுவதையும் சுட்டிக் காட்டுவதோடு, தமிழர் தேசத்து நிலங்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு,மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து சுவீகரித்து அரசுடமையாக்கிக் கொள்ளுகின்ற இரகசியத் திட்டம் ஒன்றை இந்த அரசு செய்திருந்த நிலையில் இது தொடர்பிலான வர்த்தமானி பிரசுரமானது மார்ச் 28.2025 ல் இரகசியமாக வெளியிடப்பட்டு சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிக் கொண்டுவரப்பட்டிருந்தது.

இது கூட அது வெளியிடப்பட்டு சில வாரங்களின் பின்னர் தான் ஊடகவியலாளர்கள் சிலரது முயற்சியால் வெளிச்சத்திற்குக் வெளிக் கொண்டுவரப்பட்டடு அம்பலமானது, அதன் பின்னரே இது பொதுவெளியில் பேசுபொருளாகி இதற்கு எதிராகப் பலரது வலுவான எதிர்ப்புக் குரல்களும் வெளியாகிய நிலையில், மக்கள் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் என பலரும் தம் பங்கிற்காகக் குரல் கொடுத்து நியாயத்தை பெற்றுக் கொள்வதற்காகக் களமிறங்கி இருந்தனர். பாராளுமன்றத்திலும் சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கூட இதற்காக குரல் கொடுத்தனர்.

இந்த வர்த்தமானிப் பிரசுரம் என்பது இரகசியமாகத் திருட்டுத்தனமாக வெளியிடப்பட்டுத் தமிழர்களுடைய காணிகளை அரசுடைமையாக்கிக் கொள்வதற்காக அந்த வர்த்தமானியில் அது வெளிடப்பட்ட நாள் முதல் வரும் மூன்று மாத காலக்கெடுவிற்குள் இந்தத் திட்டம் நகர்த்தப்படக் காத்திருந்தது.

இந்த வர்த்தமானியின் பிரகாரம் இந்த காணி சுவிகரிப்புத் திட்டத்தில் மூன்று மாத கால இடைவெளிக்குள் இந்த வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள காணிகளில் யாருக்காவது காணி இருந்தால் அதன் உரிமையாளர்கள் அதற்கான ஆதாரங்கள், ஆவணங்களைக் காண்பித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதாகக் கூட அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும் அந்த வர்த்தமானி வெளியிடப்பட்ட விடயம் பொது வெளியில் வெளிப்படுத்தப்படவோ தமிழ் மொழியில் வெளியிடப்படவோ இல்லை எனவும் பின்னர் அறிய முடிந்தது.

இந்த வர்த்தமானி வெளியீடு வெளிப்படையாகச் செய்யப்பட்டு வெளிப்படையாகப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு மூன்று மாத கால இடைவெளி கொடுக்கப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இது 2025.மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்டு இரகசியமாகவே வைக்கப்பட்டு அன்றிலிருந்து மூன்று மாதங்களுக்குள்

இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்ற 5940 ஏக்கர் என்ற காணிப் பரப்புக்குள்ளே தங்களது காணிகளும் இருந்தால் அதற்கான ஆதாரங்கள், ஆவணங்களைக் காண்பித்து அவற்றை நீங்கள் உங்கள் உடமையாக்கி கொள்ளலாம் என்று இரகசியமாகவே ஒரு விடயத்தை நகர்த்தியிருக்கிறது இந்த அரசு.

இவ்வாறான மறைமுக செயற்பாட்டினால் இந்த விவகாரம் பொது வெளியில் பாரிய எதிர்ப்பலைகளையும், அரசுக்கு எதிரான விமர்சனங்களையும் தோற்றுவித்திருந்தது. இதன் பின்னர் அரசு சில தமிழ் ஊடகங்கள் மற்றும் சில பொது வெளிப்படுத்தல்கள் மூலமாக ஒரு அறிவிப்பை வெளியிட்டு இந்த வர்த்தமானி தொடர்பான நடவடிக்கைகளைத் தற்காலிகமாக இடை நிறுத்துவதாக அறிவித்தது. ஆனாலும் அது சட்டரீதியாகப் பொருத்தமற்றது எனவும் அல்லது தற்காலிகமாக இடை நிறுத்த முடி யாது எனவும், இதன் சட்டத்தின் பிரிவு நான் கின் பிரகாரம் மூன்று மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதால் இச்சட்டத்தை திருத்தி அல்லது மீளப்பெற்றால் மாத்திரமே அது பொருத்தமாகும் என சட்டத்தரணிகளாலும், மக்கள் பிரதிநிதிகளாலும் பரிந்துரைக்கப்பட்டதோடு, அவ்வாறு இல்லாவிட்டால் அந்த காணிகளை அரச காணிகள் என பிரகடனம் செய்யலாம் எனவும், இந்த சட்டத்தின் பிரிவு ஐந்து (1) அவ்வாறு கூறுகிறது எனவும் சட்டத்தரணிகளால் கூறப்பட்டதால் இந்த வர்த்தமானி மீளவும் திரும்பப் பெறப்பட வேண்டும் அவ்வாறானால் மாத்திரமே இது சாத்தியமாகும் எனும் அடிப்படையிலும் வாதங்கள் முன்வைக்கப்பட்டு பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதன் பின்னர் 28.05.2025 அன்று அந்த வர்த்தமானியை மீளப் பெறுவதாகக் காணி அமைச்சு அறிவித்திருந்தது. ஆனாலும் அது தொடர்பிலான மாற்று வர்த்தமானி இன்னும் வெளியிடப்படவில்லை என்பதும் அது தொடர்பில் மீண்டும் மக்கள் பிரதிநிதிகளும், சட்டத்தரணிகளும், செயற்பாட்டாளர்களும் கேள்வியெழுப்பியுள்ளதோடு இதற்கான அழுத்தங்களும் வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

• • •

**ஈரான் மீது . . .           தொடர்ச்சி . . .**


பட்டுள்ளன.

இந்த தாக்குதலில் 200 தாக்குதல் விமானங்கள், நூற்றுக்கு மேற்பட்ட ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. முப்படையினரின் பிரதம அதிகாரியான மேஜர் ஜெனரல் முகமட் குசேன் பக்கரி, ஈரானின் புரட்சிகர இராணுவத்தின் கட்டளை அதிகாரி யான மேஜர் ஜெனரல் கொசேன் சலாமி மற்றும் முப்படையினரின் துணை பிரதம அதிகாரியான மேஜர் ஜெனரல் கொலாம் அலி ரசீத் ஆகிய படைத்தளபதிகள் பலியாகியுள்ளனர்.

அதேசமயம், ஈரானின் அணுசக்தி விஞ்ஞானிகளான மொஹமட் மெதி தெரன்சி மற்றும் பெருரூன்அபார்சிஆகியோரும்இந்ததாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். அணுவாயுதங்களை ஈரான் தயாரிப்பதை தடுப்பதற்காகவே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு தெரிவித்துள்ளார். அதேசமயம் இந்த தாக்குதல் குறித்து தமக்கு முன்னரே தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இஸ்ரேலை அமெரிக்கா பாதுகாக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த தாக்குதலில் பொது மக்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் எனவும், இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் முறையிட்டுள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்







